வைஷயிகத்தி லகவலிக்கிற ஸகத்தைதருளிச் செய்கிறார் (வரோத்யாதியால்) வைஷயிகத்துக்குத் தாதா யமருளிச்செய்கிறார் (வாத்ஸல்ய நிரவதிகேத்யாதியால்) தாரீய

மூ — கிளம்பியும், துள்ளாதார் தம்மால் - ஸஸம்ஸாரிகள் நம்பண்ணுததங்களாலே, கருமமென் - ப்ரயோஜநமென்ன? தங்களுக்கிதிலே ஷேஷி. பிறருக்கு ப்ரயோஜநமில்லாதவளவேயன்றி தங்களுக்கும் தங்களாலே ப்ரயோஜநமில்லையென்று கருத்து. தண்கடல்வட்டத்துள்ளீர் - ஸ்ரீ வைஷ்ணவஸம்பந்தவர்கள், ஸம்ஸாரிகள் ஸம்பந்தமில்லாதவர்களென்றபடி. சொல்லீர் - சொல்லுங்கோள், ஒருவராலுஞ்சொல்லக்கூடாதென்று கருத்து. ப்ராஜ்ஞர் ஸஹ்ருதய விஹாரம ஸம்பந்தமுடையரல்லார்க்கு மிவ்வர்த்தம் ப்ரகாசிப்பதன்றிருக்கிறார். * * * * ॥௧॥

தண்கடல்வட்டத்துள்ளாரை - ஸ்ரீ வைஷ்ணவரல்லாத ஸம்பந்தமுடையரை, ஸம்பந்தமுடையரான திருமொழிய மத்தோரவ ஸரமில்லாதாரையென்றபடி. தடிந்து - ஹிம்ஸித்து, தமக்கிரையாய் - தங்களுக்கு ஆஹாரமாக, உண்ணும் - பக்ஷிக்கும் ஸ்வபாவரான

மூ— திண்கழற்காலசுரர்க்குத் தீங்கிழைக்குந்திருமாலைப்*
பண்கடலைக்கொள்ளப்பாடிப்பறந்துங்குனித்துழலாதார்* ம
ண்கொளுலகிற்பிறப்பார்வல்வினைமோதமலைந்தே* ॥௨॥
மலையையெடுத்துக் கன்மாரிகாத்துப் பசுநிரைதன்னைத்*

ஆ— ப்பறந்துங்குனித்துழலாதார் நிந்த்யர்களென்கிறார்.
(மலையை) உபகாராநுஸந்தாநஹீநவ்யாதிரேகத்தை யருளுகிறார்

இ— வாசத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிஷ்க்ருஷ்டார்த்தியால்) ஸ்ரீமஹாபாகவதத்தைக்கேட்டு விக்ருதராகாதாரை நிந்தித்தார் கீழ். தச்ச்ராவ்யமான ஸவிஷய ப்ரகாசப்ரகாரத்தைக்கேட்டும் விக்ருதராகாதாரை நிந்திக்கிறார் இப்பாட்டிலென்றும் கீழே நிஷ்டரென்கிறார். இங்கே ஜநகஸமாதிகளென்கிறதென்றும் இப்படி ஸங்கதியும் ஸுலக்ஷம். ॥௨॥

✳ மூன்றாம்பாட்டு. ✳

மலையையித்யாதி பிராணியிதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (உபகாரேத்யாதியால்) ஸுஸ்பஷ்டம் ஷோடசவரம்.

பத— திண்கழற்கால்-த்ருடகடகவாதீராந, உத்ஸாஹமாய்வரஸிம்ஹஸாவிர்பூதமான வீரகடகத்தையுடையகால்களையுடையரான வென்றபடி. அசுரர்க்கு-ஸஹாரர்க்கு, தீங்கு-கஷ்டத்தை, நாசோபாயத்தையென்றபடி. இழைக்கும்-விதாரிக்கும் வ்யாபாரமுள்ள, திருமாலை - ஸ்ரீவத்ஸை, ஜகஷிவிரோதிநிரஸநத்தாலே ஸ்ரீக்கு விபரணவனை யென்று கருத்து. பண்கள் - ராகங்கள், தலைக்கொள்ளப்பாடி - உத்ஸவங்களாம்படி ராகப்பண்ணி, பறந்தும் - ஆகாசத்திலே கிளம்பியும், குனித்து - நடித்து, உழலாதார் - இதுவே காலக்ஷேபமாய்த்திரியாதவர்கள். வல்வினை - வலிஷ்டபாபங்களானவை, மலைந்து - ஸ்வரூபங்களாய், மோத - தங்களைத் தறையோடே பெத்தும்படி, ஸத்ருஸம்வாயிக்கும்படியென்கை, மண்கொளுலகில் - ப்ருதிவ்யாத்மகமான லோகத்தில், பிறப்பார்- ஜநிப்பார்கள். * * * * ॥௨॥

மலையையெடுத்து - கோவர்த்தநத்தையெடுத்து, கன்மாரி- சிலாவர்ஷத்தை, உக்ரவர்ஷத்தையென்றபடி. கல்மாரி என்கிறவிடத்தில்-லகாரலோபம், காத்து-நிவாரித்து, பசுநிரைதன்னை-

மூ—தொலைவுதவிர்த்தபிரானைச் சொல்லிச்சொல்லிநின்றெட்போ
தும்* தலையினோடாதனந்தட்டத்தடுகுட்டமாய்ப்பிறவாதா*
ரலைகொணரகத்தழுந்திக்கிடந்துழைக்கின்றவம்பரே* ||௫||
வம்பவிழ்கோதைபொருட்டா மால்விடையேழுமடர்த்த*

ஆ— க்ஷமாகிரஹஸாமர்த்த்யத்தையுடையவனானவனை அநவரதமபிர்
து ஸங்கீர்த்தநம் பண்ணாதார் யாவர்சிலர் அவர்கள் ஸம்ஸாரவாரிதி நரக
யாதநையை யநுபவிக்கிறார் கிடீரென்கிறார். ||௫||

இ— வருஷ்ரோகதமோணாதவ்யாப்திகமான மோமோவரக்ஷணத்தை
க்கேட்டும் விக்ருதராகாதாரை ஹஷிக்கிறாரென்று ஸம்ஹதியும் ஷ
ஷியை. த்ருதீயபாதத்தை ஸம்ஹரிக்கிறார் (ஸக்ருத்ஸ்ம
த்ருதியால்) தாரீயபாதத்தை ஸம்ஹரிக்கிறார் (ஸம்ஸவே
த்ருதியால்) அநுபவிக்கிறாரென்கிற வசநாநந்தர்யத்தா
லே ஸமவநாநத்தாலே விக்ருதராகாமையே நரகாநுபவ
மென்றதாகத்தோற்றுகிறது. ||௫||

ஶ—மோவஜ்ஜிகையை, தொலைவுதவிர்த்த- விநாஶத்தில் நின்றும்
ரக்ஷித்தவனை, தொலைவு-விநாஶம், பிரானை-உபகாரகனை
சொல்லிச்சொல்லி ஸ்ரீத்ருஶயத்தாலே ஆவர்த்தித்து, எப்
போதும் நின்று- ஸர்வகாலமும்படியே ஸ்ரவஸராய், தலை
யினோடு- ஶிரஸ்ஸோடே, ஆதனம்- ஆஸநம், ஸஹிதமென்றபடி.
தட்ட - தட்டும்படி, தடுகுட்டமாய் - விவிதவிக்ருதவேஷ்டிதமாய்
பிறவாதார்-ஆகாஶத்திலே கிளம்பியோடாதவர்கள், அலைகொள்-
தரங்கிதமான, ஸர்வதுஸ்தமானவென்றபடி. நரகத்து - நரகத்தி
லே, அழுந்திக்கிடந்து - மக்நராய்க்கிடந்து, உழைக்கின்ற-
க்லேஶியாநிற்கிற, வம்பரே -நூதனரே, நரகயாதனையில் நூத
நரென்றபடி. விராநுபவவி நரகமவர்களுக்கு க்ஷீண
மாகாதென்றுகருத்து. * * * ||௫||

வம்பவிழ்கோதைபொருட்டா - பரிமளம் ப்ரகாஶிக்கிறமா
லையையுடையவள்பொருட்டாக, நீளைபொருட்டாகவென்ற
படி. வம்பு - பரிமளம், அவிழ் - விகஸ்வரி, ப்ரகாஶியென்ற
படி. கோதை - மாலை, மால் - மஹத்துக்களான, விடையேழும்
வ்ருஷபங்களேழையும், அடர்த்த - வீவித்தவனை, செம்பவளத்

மூ—செம்பவளத்திரள்வாயன்சிரீதரன்தொல்புகழ்பாடிக்* கும்பி
டுநட்டமிட்டாடிக்கோகுகட்டுண்டுழலாதார்* தம்பிறப்பா
ற்பயனென்னேசாதுசனங்களிடையே* ௪॥

ஆ —(வம்பவிழ்) ஸ்ரீயாஜ்ஞையாலே நப்பின்னைப்பிராட்டியோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காக எருதேழடர்க்கப் பெற்றதினாலுள்ள ஸ்ரீ த்ருதிஸ்பத்தினாலே புதுக்கணித்தத்திருப்பவளத்தை யுடையவனுடைய இந்த ஸௌலப்யாதிகுணாநுஸம்யாஜநிசஸ்ரீத்ரு

✳ நாலாம்பாட்டு. ✳

இ— சிரீதரனென்றது ஹேதுகர்பமென்கிறார் (ஸ்ரீயாஜ்ஞையாலேயென்று) ஸ்ரீயென்னுமவள் வக்ஷஸ்தலேயமிக்கும்படி யவள் பக்கல் த்ருஷ்ணாதிசயமுண்டாகையாலே யென்றபடி. "ஸ்ரீர்நாதிலக்ஷ்மீ: யாஸீலஸ்யவோஹாஷ்ய்ருஷிஹிரிவ" என்கிறபடியே ஸ்ரீக்ருஷ்ணவாஸாஸ்ய விஹூதியான நப்பின்னைப்பிராட்டிபக்கல் ஸுஸக்தியானது ஸ்ரீவிஷயவ்யாமோஹத்தாலே வந்ததென்கிறார் என்றுகருத்து. வம்பவிழ்கோதைபொருட்டா யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நப்பின்னையிதாஷியால்) மால்விடையேழுமென்கிறதை யுரைக்கிறார் (எருதிதாஷியால்) இதிலஹிஸ்ருதாஸ்யமருளிச்செய்கிறார் (அதினுவிதாஷியால்) செம்பவளத்திரள்வாயனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (புதுக்கணித்தவிதாஷியால்) தொல்புகழென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இந்தவிதாஷியால்) தாத்பர்யார்த்தத்தைஸங்க்ர

ப— திரள்வாயன்-ஸௌந்தர்யாதிகுணநிதியானவன் சிரீதரன்-ஸ்ரீயானுடைய, தொல் புகழ் - ஸ்வாபாவிககுணங்களை ,பாடி, கும்பிடுநட்டமிட்டு - ஸாஞ்ஜலிபந்தந் நர்த்தநத்தைப்பண்ணி, நட்டம் - நர்த்தநம், ஆடி - கூத்தாடி, கோகு - உத்யோதிகம், உகட்டு - உந்நஸந்தமாய், உண்டு - இந்தகோலாஹலத்தைஸேவித்து, உழலாதார்தம்பிறப்பால் - இதுவேயாசெய்யாய் திரியாதஜநங்களுடையஉத்பத்தியாலே, தம்மென்றது - ஸாபேக்ஷம், சாதுசனங்களிடையே - ஸாதுஜநஸந்நிதியிலே, பயனென்னே-ப்ரயோஜநமேது, ஸாதுஜநஸந்நிதேஷாஞ்ஸந்நிதியாலே ப்ரயோஜநமேதென்று தாத்பர்யம். * * ௪௯॥

௫—சாதுசனத்தைநலியுங்கஞ்சனைச்சாதிப்பதற்* காதியஞ்சோ
தியுருவையங்குவைத்திங்குபிறந்த* வேதமுதல்வனைப்பாடி

ஆ—திஶயத்தாலே ஸத்ருக்ருதிம்தராகாதார்ஸமஸ்தைகஸோம ரான ஸ்ரீவைஷ்ணவர்கள்நடுவே யென்னஸம்யோஜநத்துக்காகப்பி றந்தார்களென்கிறார். * * * * * ॥௫॥

(சாது) ஸர்வவேதங்களாலும் ஸர்வேஶ்வரனென ஸ்ரீ வாத்ஸல்யனாயிருந்துவைத்து ஸ்ரீதஜநவிரோதி கம்ஸாதி ஸம்ஹாரார்த்தமாக ஸ்வஸாயுஜ்ய திவ்யரூபவிஶிஷ்ட னாய்க்கொண்டிந்தலோகத்திலே ஸஜாதீயனாய்வந்துபிறந்துஸ்ரீ

இ—யுக்கிறார் (ஸத்ருக்ருதித்யாதியால்) சாதுசனங்களிடையேயெ ன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸமஸ்தேத்யாதியால்) தம்பிறப்பால் பயனென்னே யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (என்னவித்யாதியால்) அவர்களுக்கஸிஜநமுண்டாகு ஹும் வ்யக்தமென்கிறாரிப்பாட்டிலென்று ஸங்கதியும்ஸித்தை.

✳ஐந்தாம்பாட்டு.✳

வேதமுதல்வனை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கி றார் (ஸர்வேத்யாதியால்) சாதுசனத்தைநலியுமென்கிறதைபுரை க்கிறார் (ஸ்ரீதேத்யாதியால்) கஞ்சனைச்சாதிப்பதென்கிறதை யு ரைக்கிறார் (கம்ஸேத்யாதியால்) ஆதியஞ்சோதியுருவை யங்கு வைத்தென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வஸாயுஜ்ய ணேத்யாதியால்) இங்குப்பிறந்தவென்கிறதை யுரைக்கிறார் (இந்த லோகத்திலேயித்யாதியால்) திவ்யரூபத்தை அங்கேவைத்து

ரூ—சாதுசனத்தை - ஸாத்விகஜநமான தேவகீ வஸுதேவாதி களை, நலியும் - பீடிக்குமவனை, கஞ்சனை - கம்ஸனை, சாதி ப்பதற்கு - ஸாயிக்கிறதற்கு, ஜயிக்கைக்காகவென்றபடி. ஆதி- ஸவதாரரூபங்களுக்காதியான, அம் - ஸுந்தரமான, சோதி- ஸ்வப்ரகாஶமான, உருவை - ரூபத்தை, அங்குவைத்து - அ ங்குப்போலேவைத்துக்கொண்டு, ஸ்ரீவைகுண்டத்திற்போலேய மித்துக்கொண்டென்றபடி. பரரூப தாத்ரூப்யவிஶிஷ்டனு யென்றதாயிற்று இங்குப்பிறந்த,வேதமுதல்வனை-வேதஸம்யாநனை, வேதாந்த ஸம்யாநஸ்திவாத்ஸல்யனையென்றபடி. பாடி- ஸாநம்

மூ—வீதிகடோறுந்துள்ளாதா* ரோதியுணர்ந்தவர்முன்னாவெ
ன்சவிப்பார்மனிசரே* ||௫||
மனிசரும்மற்றும்முற்றுமாய்மாயப்பிறவிபிறந்த* தனியன்பிற
ப்பிலிதன்னைத்தடங்கடல்சேர்ந்தபிரானைக்* கனியைக்கரும்பி

ஆ—ஞானத்தை யுடையனாயிருந்தவனைப்பாடி வீதிகள்தோறும்
திரியாதாரெத்தனையேனுமறிவுடையரேயாகிலும் அவர்களாலொரு
ப்ரயோஜனமில்லையென்கிறார். * ||௫||

(மனிசரும்) ஸ்வதாஸஸேஸ்வஸ்ய விஸஜாதீயனாய்,

இ—விட்டு இங்கேபிறந்தானென்றஸம்பந்தமில்கொள்ளில் ஒரு ஸ்தா
நிஸயம் சொல்லிற்றாகாமையால் அங்குள்ளனது ஸ்வரூபாஸம்ப
மாய் திவ்யரூபத்தை யங்குப்போலேவைத்துக்கொண்டிங்கு பி
றந்தானென்று விவக்ஷிதமென்றுகருத்து. ஓதியுணர்ந்தவர் முன்
னாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எத்தனையேனு
மித்யாதியால்) யென்செவிப்பாரித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செ
ய்கிறார் (அவர்களாலிதி) * * * ||௫||

✳ ஆறும்பாட்டு. ✳

தனியனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வதரே

ப—பண்ணி, வீதிகள்தோறும்துள்ளாதார் - ஸ்வேஷ்டம், ஓதியு
ணர்ந்தவர்முன்னா - அத்யயனம்பண்ணி ஜ்ஞானிகளாயிருப்பார்மு
ன்னாக, என்சவிப்பார் - என்னஜவிப்பார்கள், மனிசரே - மநு
ஷ்யரோ, அவர்கள் ஜவமும் வ்யர்த்தம். அவர்கள் - மநுஷ்ய
ருமல்லரென்றுகருத்து. * * * ||௫||

மனிசரும் - மநுஷ்யரும், மற்றும் - அந்யரும், தேவருமெ
ன்றபடி. முற்றுமாய் - ஸ்தாவரமுமாய், ஸர்வஸஜாதீயர்க்குக்க
னுமாயென்றபடி. ராமக்ருஷ்ணாதிமநுஷ்யாவதாரனும் உபேந்த்ர
திதேவாவதாரனும் ஸர்வஸஜாதீயரூபவனுமாயென்றதாய்த்து
மாயப்பிறவிபிறந்த - ஆஸ்சர்யஜந்மங்களிலேபிறந்தவனை, தனியன்
அஸதீசனை, விஸஜாதீயனையென்றபடி. பிறப்பிலிதன்னை - ஜ
ந்மாஹிதனை, கர்மக்ருதஜந்மாஹிதனையென்றபடி. தடங்க
டல்சேர்ந்த - விஸாலமான ஸமுத்ரஸாயியான, பிரானை - உபகாரக
னை, கரும்பினின்சாற்றை கரும்பினுடவினியசாறதை, ஸாது

மூ—ன்றாற்றைக்கட்டியைத் தேனையமுதை* முனிவின்றி
யேத்திக்குனிப்பார் முழுதுணர் நீர்மையினோரே* ॥௯॥
நீர்மையினாற்றவர் வியவைவர்க்கருள்செய்து நின்று*

ஆ—ஸர்வாதிகஜ்ஞாநசக்திசராய், க்ஷீரார்ணவநிகேதநராய், ஸ்ரீ
வத்ஸசிஹ்நராணவனமாக ஸ்வஸங்கல்பத்தினாலே ஸர்வரக்ஷகத்வ தோஷ
ங்களொன்றும் மாயியாமே ஜநாதிஷ்டாதிஸர்வயோநிகளிலும் வந்
து அவதீர்ணராய், நிரதிசயபோக்யதையிருந்தவனை ஸந்
ஸ்ரியாக்களாய்க்கொண் டேத்திக் குனிப்பார் யாவர் சிலர்? அ
வர்கிடீர்? ஸர்வஜ்ஞராகிறாரென்கிறார். ॥௯॥

இ— த்யாதியால்) பிறப்பிலி தன்னையென்கிறதற்குத் தாத்பர்யமரு
ளிச்செய்கிறார் (கர்மாதீநத்யாதியால்) ஆச்ரயணீயரான மாயம
லமிங்கே அவதாரஸம்ஸ்தாநமெல்லாம் ஸ்வேச்சையாலே யென்கிறார் (ஆ
ஸ்ரீதத்யாதியால்) தோஷங்களென்றது - ஜ்ஞாநஸங்கோசமு
ம் துக்காதிகளும் ஜராமரணாதிகளும் தேஹாவஸானமும் ஆ
யுஸ்ஸ்ரவமுமென்றபடி. மாயியாமேயென்றது - ஸம்ஷ்டித்துமில்லா
மலென்றபடி. அவதாரத்தில் ஸௌலப்யத்துக்குத் தாத்பர்யமருளி
ச்செய்கிறார் (ஜநாதிஷ்டத்யாதியால்) ஸ்தீயவாதத்துக்குந் தாத்
பர்யமருளிச்செய்கிறார் (நிரதிசயேத்யாதியால்) முனிவின்றியென்
கிறதை யுரைக்கிறார் (ஸந்ஸ்ரியாக்களாயென்று) அவதாரத்திலே
தோஷதர்சனாதி தோஷாவிஷ்கரணரஹிதராயென்றபடி. முழு
துணர் நீர்மையை வ்யாக்யானிக்கிறார் (ஸர்வஜ்ஞரென்று) ॥௯॥

ப— வான ஸாரத்தையென்றபடி. கட்டியை - ஸாரத்தை, தேனை -
போக்யமானவை, அமுதை - சத்ரத்தை, முனிவு - தோஷம், அவஜ்ஞை
யையை உபலக்ஷிக்கிறது. இன்றி-இல்லாமல், ஏத்தி - ஸ்தோத்ரித்து
குனிப்பார் - நர்த்திப்பார், முழுதுணர்நீர்மையினோர் - ஸர்வஜ்ஞ
ஸ்வபாவர், ஸர்வஜ்ஞரென்றபடி. * * ॥௯॥

ஐவர்க்கு - பஞ்சபாண்டவர்களுக்கு, அருள்செய்து - க்ரு
பைபண்ணி, நீர்மையில் - தாக்ஷிண்யஸம்ருத்தரான, நீர்
மை - தாக்ஷிண்யம். நூற்றுவர் - ஸதஸங்க்யரான துர்யோதன
நாதிகள், வீய - நசிக்கும்படி, நின்று- 'பாண்டவாநாம் ...
...' என்னும்படி பாண்டவர்களுக்கு

மூ—பார்மல்கு சேனையவித்த பரஞ்சுடரை நினைந்தாடி* நீர்மல்கு கண்ணினராகி நெஞ்சங்குழைந்து நையாதே* ஊன்மல்கி மோடு பருப்பாருத்தமர்கட்கென்செய்வாரே* ॥எ॥

ஆ—(நீர்மையில்) பாண்டவர்கள் பக்கலுள்ள வாத்ஸல்யத்தாலே தன்விரோதிகளான துர்யோதநாதிகளையும் மற்றுமுள்ள ஸேநாஸமூஹத்தையுமடங்க நிரஸித்ததுவே தனக்கு நிரதிசய தேஜஸ்ஸாக விருந்தருளினவனை நினைத்து நீர்மல்குக்கண்ணினராகி நெஞ்சங்குழைந்து நையாதே கேவலம் சரீரபோஷகராயிருப்பார் இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் வஸிக்கிற தேசத்திலே என்செய்யவுளராகிறாரென்கிறார். * * * ॥எ॥

✳ ஏழாம்பாட்டு. ✳

இ—ஐவர்க்கருள்செய்தென்கிறது ஸௌசீல்யமென்கிறார் (வைஷ்ணவர்களித்யாதியால) நீர்மையிலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்விரோதிகளென்று) நூற்றுவர்வீயவென்றென்ற பதமாக்கித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (துர்யோதநாதிகளையுமென்று) பார்மல்குசேனையவித்த வென்கிறதை யுரைக்கிறார் (மற்றுள்ளவித்யாதியால்) பரஞ்சுடரையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவேயித்யாதியால்) ஊன்மல்கிமோடு பருப்பாரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கேவலமித்யாதியால்) உத்தமர்கட்கென் செய்வாரென்கிறதை யுரைக்கிறார் (இந்தஸ்ரீவைஷ்ணவித்யாதியால்) ॥எ॥

ஶ—ஸர்வமுமாய் நின்று, பார்மல்கு - ஸ்ருஷ்டியிலே வஸியா நிற்கிற, சேனை - ஸேனையை, அவித்த - நசிப்பித்தவனை, பரஞ்சுடரை நினைந்தாடி - ஸ்துதி, நீர்மல்குகண்ணினராகி. ஆநந்தாஸ்ரு வர்ஷபூர்ணநேத்ரராய், நெஞ்சக்குழைந்து - ஹ்ருதயம் த்ரவீபூதமாய், நையாதே - ஸிதிலராகாதே, ஊன்மல்கி, மாம்ஸவ்ருத்தராய், விவேகமில்லாதாரென்றபடி. மோடு - பிசல், ஸ்தௌல்யமென்றபடி. பருப்பார் - புஷ்டிக்குமவர்கள், புஷ்டிசரீரவர்த்தகரென்றபடி. உத்தமர்கட்கு - ஸர்வோத்க்ருஷ்டர்க்கு, என்செய்வார் - என்ன உபகாரத்தைச்செய்யக்கடவர், ஸ்ரீவைஷ்ணவர்க்குவேயன்றிக்கே எல்லார்க்கும் ஜநநம்பொய்ஜநமென்றிருக்கிறார். ॥எ॥

மூ—வார்புனலந்தண்ணருவிவடதிருவேங்கடத்தெந்தை* பேர்
பலசொல்லிப்பித்தற்றிப்பித்தரென்றேபிறர்கூற* ஊர்பலபுக்
குர்புகாதுமுலோகர்சிரிக்கநின்றுடி* யார்வம்பெருகிக்கு

ஆ— (வார்புனல்) நிரதிசயபோக்யமான திருமலையிலே நி
ன்றருளி யென்னை யடிமைகொண்ட திருவேங்கடமுடையானு
டைய திருநாமங்களைச்சொல்லிப்பிதற்றி, ஸ்ரீவைஷ்ணவர்களல்லா
தார் பித்தரென்றுசொல்லும்படி ஊடைஷ்ப்ர் ஸமீபஸ்தத்தோடு
ஸமஸ்தப்ரதேசத்தோடு வாசியன்றிக்கே ஜனங்கள்சிரிக்க அதுவே
உத்தேஸ்யமாம்படி ஸம்ஸாரவைஷம்யத்தை யுடையராய் ஹர்ஷ

* எட்டாம்பாட்டு. *

இ—வார்புனலந்தண்ணருவி யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்
செய்கிறர் (நிரதிசயபோக்யதயால்) எந்தையென்கிறதற்குத் தா
த்பர்யமருளிச்செய்கிறார் (என்னையிதயாதியால்) ஊர்பலபுக்கும் பு
காதுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஊடைஷ்ப்ரதி
த்யாதியால்) வாசியின்றிக்கே யென்கிறதற்கு ஆடுமவர்களென்கி
றதோடே ஸங்க்யம். சிரிக்கநின்றுடியென்கிற வாக்யஸ்வாரஸ்யத்
துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவேயித்யாதியால்) நின்
றுடியென்கிறதை விவரிக்கிறார் (ஸம்ஸாரவைஷம்யத்யாதியால்) ஆர்
வம்பெருகிக்குனிப்பாரென்கிறதை யுரைக்கிறார் (ஹர்ஷவேகம

ப—வார்புனல் - ஸதா ஸஞ்சரணஜலமாய், அம் - ஸுந்தரமாய்,
தண் - சீதலமான, அருவி - நிர்ஜரத்தையுடைத்தாய், வட - உத்
தரதிக்குக்காரணமான, திருவேங்கடத்தெந்தை - ஸ்ரீ
வேங்கடாசலவாஸியினுடைய, பேர் - நாமங்களை, பல - பஹு
க்களை, சொல்லிப்பிதற்றி - ப்ரீதிபூர்வத்தாலே யசங்க்யமாகவுச்
சரித்து, இதுக்கு குனிப்பாரென்கிறதோடே ஸங்க்யம், பித்த
ரென்றே - உந்மத்தரென்றே, பிறர் - ஸம்வசஸ்ரீவைஷ்ணவரான
வர்கள், கூற - சொல்லும்படி, பலஊர் - பஹுஸ்தானங்களை, பு
க்கும் - ப்ரவேசித்தும், புகாதும் - ப்ரவேசியாதேயும், ஸ்தான
த்திலும் வனத்திலும் தாரதம்யமாகவென்றபடி, உலோகர்சிரிக்க-
லோகர் சிரிக்க, நின்றுடி - ஸ்திரமாய் சிலவேஷங்களைப்பண்ணி, ஆர்
வம்பெருகி - ஹர்ஷவேகம் வர்த்தித்து, குனிப்பார் - ஸம்ஸாரவை

மூ—னிப்பாரமரர்தொழப்படுவாரே* ॥அ॥
அமரர்தொழப்படுவானையனைத்துலகுக்கும்பிரானை* யமரமனத்தினுள்யோகுபுணர்ந்தவன்தன்னோடொன்றாக* வமரத்துணியவல்லார்களொழியவல்லாதவரெல்லா* மமரநினைந்

ஆ—வெஸம் மிருந்தாடுமவர்கள்அயர்வறுமமரர்களிலும்ஶ்ரேஷ்ரென்கிறார். * * * * ॥அ॥

(அமரர்) அயர்வறுமமரர்களதிபதியாய் ஸர்வேஶ்வரனாயிருந்த வெம்பெருமானை கைவல்யார்த்திமாக ஆஶ்ரயிக்குமந்த க்ஷேத்ரஜ்ஞரானவர்களொழிய வல்லாதாரெல்லாம் இப்படி எம்

இ—த்யாதியால்) அமரர்தொழப்படுவாரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அயர்வறுமித்யாதியால்) * ॥அ॥

✷ ஒன்பதாயிரப்படி. ✷

அவன்றன்னோடொன்றாகவமர என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கைவல்யார்த்திமாகவென்று) அமரமனத்தினுள்யோகுபுணர்ந்து என்கிறதை ஸங்க்ரஹிக்கிறார் (ஆஶ்ரயிக்குமென்று) துணியவல்லார்களென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ஷேத்ரஜ்ஞரென்று) ஹேயகுணங்களிற்க கைவல்யத்திலே துணிகை க்ஷேத்ரஜ்ஞக்ருத்யமென்று நினைக்கிறாரென்று கருத்து. அமரநினைந்து என்கிறதையுரைக்கிறார் (இப்படியித்யாதியால்)

ரூ—நமிப்பார், அமரர்-ஸூரிகளாலே, தொழப்படுவாரே. ॥அ॥

அமரர்தொழப்படுவானை - ஸூரிஸேவ்யனை, அனைத்துலகுக்கும்பிரானை - ஸர்வலோகங்களுக்கும் ஶேஷியை, உக்தஶ்ரீவிஶேஷ:, அமர - ஸுஸ்திரமாக, மனத்தினுள் - ஹ்ருதயத்துக்குள்ளே, யோகுபுணர்ந்து - யோகத்தைப்பண்ணி, அவன்தன்னோடொன்றாக - பரமாத்மாவோடே ஸமமாகைக்காக, "ஸர்வஹேயப்ரத்யநீகஸ்வரூபம் யோகாப்யாஸஜந்யஸ்வரூபஸித்த:" என்கிறவிடத்திலே ஸ்வரூபம்போலே ஒன்றாகவென்றது ஸாம்யவாசம். தேவதாந்தஷ்யாதிஶரீரவஶ்யக்யவிரஹாத்பவாதாத்மஸாம்யமாகிற கைவல்யத்தைப்பெறுகைக்காக வென்றபடி. அமரத்துணியவல்லார்களொழிய - ஸுஸ்திரமாகவத்யவஸாயம்பண்ண ஶக்தரானவர்களைத்தவிர, அல்லாதவரெல்லாம்- வ்யதிரிக்தரெல்லாருக்கும், அமர - த்ருடமாய்

மூ—தெழுந்தாடியலற்றுவதேகருமமே* ॥௯॥
கருமமுங்கருமபலனுமாகியகாரணன்றன்னைத்* திருமணி
வண்ணனைச்செங்கண்மாலினைத்தேவபிரானை* யொருமைம

ஆ—பெருமானை ஸந்த்யோஷித்து ஸ்துதிக்கும்படியாக வ
னை ஆஸ்ரயிங்கோளென்கிறார். * * * ॥௯॥

(கருமமும்) ஸாத்யஸாதநங்களுக்கும் ஸாதநங்
ளுக்கும் நிர்வாஹகனாய், ஸர்வஜகத்காரணமாய், நிரதிசயஉஜ்
ஜ்வலநீலரத்னஸத்ருஶ திவ்யரூபவானாய், புண்டரீகாக்ஷனாய், ஸ
ர்வேஶ்வரனாய் ஸ்ரீதேவியும் நித்யஸூரிகளு மிருக்கு
மெம்பெருமானை ஏகாக்ர மனஸ்ஸராய்,

இ— எழுந்தாடியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ
ந்தோஷாதிசயத்தாலே) அலற்றுவதே கருமமென்கிறதற்குத் தா
த்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரயிங்கோளென்று) கீழ்பண்ணி
ன ஸ்துதி நிர்வாஹகத்தை ப்ரபோதத்தாலே
சொல்லுகிறாரென்று ஸம்கதி ஸூசிதமாகிறது. ॥௯॥

✳ பத்தாம்பாட்டு. ✳

கருமமும் கருமபலனுமாகிய என்கிறதற்குத் தாத்பர்யமரு
ளிச்செய்கிறார் (ஸாத்யஸாதநாதிகளாலும் நி
யந்தாவாயிருக்கிற நிர்வாஹகனென்று கருத்து. தேவபிரானையென்
கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனாகையால்)
ஒருமைமனத்தினுள் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்
(ஏகாக்ரசித்தராகையால்) உள்ளங்குழைந்தெழுந்தாடி என்கிறதற்குத்

ரூ—ஸந்தோஷமாக,நினைந்து - ஸ்மரித்து,எழுந்து - உஜ்ஜ்ரும்பித்து,
ஆடி - நடித்து, அலற்றுவதே - ஸர்வாத்மநா ஸ்துதிப்பதே,
கருமம் - கர்தவ்யம். * * * ॥௯॥

கருமமும்கருமபலனுமாகிய - ஸாத்யஸாதநரூபனான, கா
ரணன் தன்னை - காரணபூதனான, திருமணிவண்ணனை - ஸ்ரீ
மணிவர்ணனான, செங்கண் - புண்டரீகாக்ஷனான, மாலினை -
ஆஶ்ரிதவ்யாமோஹமுடையனான, தேவபிரானை - தேவாதிதேவனை,
ஒருமை - ஐக்யம், ஒருமைமனத்தினுள் - ஏகாக்ரமான
மனஸ்ஸில், ..., ...

மூ—னைநதினுளவைத்துள்ளங்குழைந்தெழுந்தாடிப்* பெருமை
யுநாணுந்தவிர்ந்துபிதற்றுமின்பேதைமைதீர்ந்தே* ॥௰॥
தீர்ந்தவடியவர்தம்மைத்திருத்திப்பணிகொள்ளவல்ல* வார்

ஆ— நிரதிசயஸக்தியுக்தராய், நிரஸ்தாஹங்காராதிதோஷ
ராய், ஸமவஸ்த்திதஸ விஷயஸம்ஸாரவிரக்தராய்க்கொண்டேத்து
ங்கோளென்கிறார். * * * ॥௰॥

(தீர்ந்த) தன்திருவடிகளை ப்ராப்யமும் ப்ராபகமுமென்
றத்யவஸித்திருக்கு மாஸ்ரிதரை நிரஸ்தஸமஸ்தவிபக்ஷராக்கி யடி
மைசெய்வித்துக் கொள்ள வல்லவார்ந்த புகழையுடையனாய்,

இ—தாத்பர்யமருளிச்செய்கிறார்(நிரதிசயேத்யாதியால்)பெருமை
யும்நாணும்தவிர்ந்து என்கிறதைபுரைக்கிறார் (நிரஸ்தேத்யாதியால்)
ஸூசிதவும்லஜ்ஜாஸ்ரமம். பேதைமைதீர்ந்து என்கிறதற்குத் தாத்
பர்யமருளிச்செய்கிறார் (ஸமவஸ்திதேத்யாதியால்) உக்தாநுவாதியான
பேதைமைஸப்தம் தத்காரியமான விஷயஸம்ஸாரத்தை லக்ஷிக்கி
றது. பிதற்றுமினென்கிறதை யுரைக்கிறார் (ஏத்துங்கோளென்று)
கீழ்ப்பாட்டில்சொன்ன ஸ்வரூபணத்துக்குவயுக்தமாக அவனு
டைய ஸாத்ம்யகாரவயுக்தாகாரங்களையு மிவர்களுக்கு ஸாத்
ம்யாவயுக்தமாக ஸ்ஹங்காராதி த்யாகத்தையும் சொல்லு
கிறதென்று இப்படிஸம்கதியும் ஸூசிதமே. ॥௰॥

✳ நிகமனம். ✳

தீர்ந்த என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நின்றீ
ருவிதேத்யாதியால்) திருத்தி என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்
கிறார் (நிரஸ்தேத்யாதியால்) பணிகொள்ளவல்லவென்கிறதை யு
ரைக்கிறார் (அடிமையிதேத்யாதியால்) அமரர்பிரானை யென்கிறது

ம—ஸ்வாவஸாயியானசேதநிலென்றபடி, வைத்து - ஸ்தாபித்து,
உள்ளங்குழைந்து - ப்ரேமத்தாலே உநமாதவித்து, எழுந்தாடி-
ஸஷ்டம், பெருமையும்- கௌரவமும், ஸாக்ஷதவம்ஸையும்
என்றபடி. நாணும் - தத்காரியமான லஜ்ஜையையும், தவிர்ந்து-
த்யஜித்து, பேதைமைதீர்ந்து - அறிவுகேடு நிவ்ருத்தமாய்,பிதற்று
மின் - ஸஸ்மோகஸ்தோத்ரியுங்கோள். * * ॥௰॥
தீர்ந்த - ஸுப்ரஸ்வவஸிதரான, அடியவர்தம்மை - ஆஸ்ரிதரை,

மூ—ஆர்ந்தபுகழச்சுதனையமரர்பிரானையெம்மானை* வாய்ந்தவளவயல்சூழ்தண்வளங்குருகூர்ச்சடகோபன்* னேர்ந்தவோராயிரத்திப்பத்தருவினைநீறுசெய்யுமே* ॥௧௧॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—அயர்வறுமமரர்களோடே ஸம்ஶ்லேஷிக்குமாப்போலே ஆஶ்ரிதரோடு ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவனாய், எனக்குஸ்வாமியாயிருந்த வெம்பெருமானைச்சொன்ன வித்திருவாய்மொழி ஸமஸ்த து:க்கவிரோதிகளைப்போக்குமென்கிறார். * * * ॥௧௧॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

இ—த்ருஷ்டாந்தஸஹிதமென்கிறார் (அயர்வறுமித்யாதியால்) அச்சுதனையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதரோடித்யாதியால்) நேர்ந்த என்கிறதையுரைக்கிறார் (சொன்னவென்று) அருவினை நீறுசெய்யுமே என்கிறதை விவரிக்கிறார் (ஸமஸ்தேத்யாதியால்) * * * * * * ॥௧௧॥

ப—திருத்தி - ஸ்வாதீநீகரித்து, பணிகொள்ளவல்ல - கைங்கர்யம்செய்வித்துக்கொள்ள ஸமர்த்தனான, ஆர்ந்தபுகழ் - பரிபூர்ணகுணனான, அச்சுதனை - அச்யுதனான, அமரர்பிரானைஎம்மானை இதற்குநேர்ந்தவென்கிறதோடே ஸம்பந்தம். வாய்ந்தவள - ஸம்ருத்திகளான, வயல் - கேதாரங்களாலே, சூழ் - பரிவ்ருதமான, தண் - ஶீதளமான, உத்யாநாதிகளென்றுகருத்து, வளங்குருகூர் - ஸௌந்தர்யமானதிருநகரியில், சடகோபன், நேர்ந்த - சொன்ன, ஓராயிரத்திப்பத்து, அருவினை - கடினபாபங்களை நீறுசெய்யும் - பஸ்மீகரிக்கும். * * * ॥௧௧॥

ஜ்ஞாநவைராக்யபூஷாய ஶ்ரீமதே வேதாந்த
ராமாநுஜமஹாதேஶிகாய நம:

ஸ்ரீ:.

ஸ்ரீதிருவாய்மொழி வ்யாக்யாநாவலி:.

(மொய்ம்மாம்பூம்பொழில்.)

த்ராஸத்ரேஷ்டோத்ரக்ஷ ஸாரஸிவாஸதேந கோ
காலே த்ராணகாலே கோதாயோக்ஷாவதோதக்ஷ
ஸதுகிதயோத ஸிம்ஹாவதாரகோபேந க்ஷோணீ
ஸாரத்யேவோதே க்ஷிதிபரவஸதள நிஜஜநாராயண
தாயாம் விஸ்வாஸம்லேஸமுள்ளோர ஸ்ராஹ தநாவஸாஷ
தோதநாதகக்ஷம்ஜமாத ॥ ௯௬ ॥

(த்ராஸத்ரேஷ்டோத்ரக்ஷ) முதலைச்சிறைப்பட்டுநின்ற கைம்மாவுக்கருள்செய்த - த்ராஸத்தாலே த்ரஸிக்கப்பட்ட கஜேந்த்ரனை விடுவித்தருளினதிலும், (ஸாரஸிவாஸதேந) திண்கழற்காலசுரர்க்குத்தீங்கிழைக்கும் - ஆஸ்ரிதவிரோதிகளான அஸுரர்களுடைய நிரஸநத்திலும், (கோகாலே த்ராணகாலே) மலையையெடுத்துக்கன்மாரிகாத்துப் பசுநிரைதன்னைத் தொலைவு தவிர்த்த - கோவர்த்தநத்தையெடுத்து கோகுலத்தை ரக்ஷித்தருளினதிலும், (கோதாயோக்ஷாவதோதக்ஷ) வம்பவிழ்கோதை பொருட்டா மால்விடையேழுமடர்த்த - நப்பின்னைப்பிராட்டிக்காகப்பண்ணின வ்ருஷபஜயத்திலும், (ஸதுகிதயோத) சாதுசனத்தைநலியும் கஞ்சனை - அஸுரப்ரக்ருதியான கம்ஸனை விநாசத்தோடே ஸ்ரீக்ருஷ்ணனாய் அவதரித்தருளி ஸாதுக்களான தேவகீவஸுதேவர்களைபாயித்த கம்ஸனை ஸம்ஹரித்தருளினதிலும், (ஸிம்ஹாவதாரகோபேந) தடங்கடல்சேர்ந்தபிரானை - ஆஸ்ரிதரக்ஷணத்திலே அவஹிதனாய்க்கொண்டு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினதிலும், (க்ஷோணீஸாரத்யேவோதே) ஐவர்க்கருள்செய்து நின்று பார்மல்குசேனையவித்த - பாண்டவர்களுக்காக யுத்தத்திலேநின்று பூபாரத்தைப் போக்கியருளினதிலும், (க்ஷிதிபரவஸதள) வார்புனலந்தண்ணருவிவடதிருவேங்கடத்தெந்தை - அவதாரத்தில்பிற்பட்டாரும் இழவாதே அநுபவிக்கும்படியாக ஸுலபனாய் ப்ரஸித்தமான திருமலையிலே நின்றருளினதிலும், (நிஜஜநாராயணதாயாம்) அமரர்தொழப்படுவானை -

ஈ—தா—அயர்வறுமமரர்களாலே ஸேவ்யதேசராயிருக்கை
யிலும், (விஸ்வரூபம்செய்த) காரணன்தன்னை. லோகங்களையெல்லாம்
ஸ்ருஷ்டித்தருளினதிலும், ஒருப்பட்டநாவலயிப்பாரை எம்பெ
ருமான்தன்னுடைய திவ்யஸௌந்தர்யாதிகளாலே பிசசேற்
றி ஸக்தமான ஸமஸ்தவேதிதங்களையுடையராகப்பண்ணுமெ
ன்று "மொய்ம்மாம்பூம்பொழில்" என்கிற ப்ரபந்தத்திலே ஆழ்வார்
அருளிச்செய்தருளினாரென்கிறார். ॥ ௧௦அ ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

மூன்றாம்பத்தில்ஐந்தாந்திருவாய்மொழிமுற்றிற்று

ஆறாந்திருவாய்மொழி.

ஆ—(செய்யதாமரைக்கண்ணன்) பிதற்றுமின்பேதைமைதீர்ந்து
எனறுகொண்டு எம்பெருமானை ஆஸ்ரயிங்கோளென்று முன்பு
சொல்லப்பட்டவர்களைக்குறித்து எம்பெருமானுடைய ஸௌலப்ய

ஆறாந்திருவாய்மொழி.

இ—. இதிலே ஸர்வஸ்வாமித்வமான ஸர்வகாரணத்வத்தையும் ஸர்வா
ராதிகளையும் இத்திருவாய்மொழியில் பேசுவானேன்? "அலற்று
வகைகரும" மென்றும் "பிதற்றுமின்" என்றும் இங்கேசொல்லி
யிருக்க "பரவுமினோ மனம்வைம்மினோ" இத்யாதியாலே இங்கே
ஆஸ்ரயணீயனைஸந்தான் பண்ணுவானேனென்ன ஸமாதிப்பி
க்கிறார் (பிதற்றுமினித்யாதியால்) ஸௌலப்யகாஷ்டைபெற்றத்தி
லே இத்திருவாய்மொழிக்குத் தாத்பர்யம். ஆஸ்ரயணம் ஸகல
ஜேநாநந்தாவஹ்யம், ஸர்வகாரணத்வமும் பாரம்யமாகை
யாலே ஸௌலப்யத்துக்கு ஆஸ்ரயணீயதாஸித்த்யர்த்தம்
அநுவாத்யம், ஸர்வாதிசயமான ஸௌலப்யமும் ஆஸ்ரயண
ஸௌலப்யகாஷ்டையிலே ஆகாரஸாஜாதீய மநுவாத்யமெ
ன்றபடி. பத்துடையடியவரிலே ஸௌலப்யகாஷ்டை சொல்
லிற்றில்லையோவென்னில்; தசாவதாரமான ஸங்க்ரஹமா

ஆ—ஸ்வகாரத்வைஷையை யருளிச்செய்கிறார். ஸம்க்ஷேபஸஹஸ்ரே

இ—பரத்வஸௌலப்யம் காருண்யம் விவக்ஷிதமென்பார்கள். இதற்கு அதிசயிதத்வமேதென்னில்; விபவாவதாரங்களைப்போ லன்றிக்கே எல்லார்க்கும் அநுபவிக்கலாம்படி ஸதாஸந்நிஹிதயு ண்டாகையும் "அர்ச்யஸ்ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ் திதி:" என்னும்படி நிற்கையும், ஆனாலும் கிளரொளியிலும் ஒழிவில்காலத்திலும் இவ்வர்த்தம் ஸித்தமன்றோவென்னில்; அ தொரதிசயிதமான ஸௌலப்யம் விவக்ஷிதமென் பார்கள். அதொரதிசயிதத்வ மிதுக்கேதென்னில்; எம்பெ ருமானுக்கென்று அஸாதாரணமாய்வருத்த ஸந்நிகேதனங்க ளிலே நியதவேஷமாய் நிற்கையன்றிக்கே ஸம்ஸாரிகளுடைய ஸ்வயத்நஸித்தநிவேசனங்களான க்ருஹக்ஷேத்ரங்கள்தோறும் நிற் கையும் ஆச்ரிதரேதேனும் ஒரு த்ரவ்யத்தைத் திருவுடம்பாகக் கோலினால் அத்தையேதனக்கு திவ்யவிக்ரஹமாகக்கொண்டருளு கையும் ப்ருஹஸ்பத்யாதிகள்போலே ஆயவிஹாராஹாரமாகை யும் இவன்தான் பசித்தபோது ஏதேனுமொன்றை நிவேதநம் ப ண்ணினால் அத்தை ஸ்வீகரிக்கையும் என்றிவைமுதலானவை; அவைத்தான் ஆச்ரிதாபிமதத்ரவ்யத்தையே தனக்கு திவ்யவிக்ரஹ மாகக்கொண்டருளுமென்கிற விதொன்றும் இத்திருவாய்மொழி யில் தஞ்சமாகிற என்கிறபாட்டில் ஸ்பஷ்டம், மற்றவையெல்லாம் அ ர்த்தஸித்தங்கள். முன்சொல்லப்பட்டவர்களைக்குறித்து என்கிற வித்தாலே ஸம்பந்தியும் ஸித்தமிகே. தாம் ஆச்ரயிக்கச்சொல்லச் செய்தேயும் அவர்களாச்ரயியாதிருந்தவாறே இவர்களெம்பெரு மானை ஆச்ரயியாதொழிகிறது அவனுடைய ஸௌலப்யகாஷ்டை யை அறியாமையாலே என்றுபார்த்து அவர்களைக்குறித்து அத்தை உபதேசிக்கிறாரென்றுகருத்து. * *

✳ முதற்பாட்டு. ✳

செய்யசூழ்சுடர்ஞானமாய் என்கிறதற்குத் தாத்பர்யமருளி ச்செய்கிறார் (ஸங்க்ஷேபத்ருஷ்டியால்) முற்றுமாய் வெளிப்பட்டு

மூ — செய்யதாமரைக்கண்ணனாயுலகேழுமுண்டவவன்கண்டீர்*
வையம்வானம்மனிசர்தெய்வமற்றும்மற்றுமற்றுமுற்றுமாய்ச்*
செய்யசூழ்சுடர்ஞானமாய் வெளிப்பட்டிவை படைத்தான்

ஆ — கல்யாணகுணத்தாலே வையம்வானம் மனிசர்தெய்வம் மற்றும்மற்றும் மற்றும் முற்றுமாய்க்கொண்டு தோற்றுகிற இவற்றுக்கு ஸ்ரஷ்டாவாய்ப் பின்னையும் தேஜஸ்ஸூ ஸ்வரூபாவ்ய ஸத்யாநந்த விசிஷ்டனாய், ப்ரஹ்மாதிகளுக்குமாஸ்ரயணீயனாய் ஸ்வஜநஸம்ரக்ஷணார்த்தம் அவதரித்தவனாய், ஸௌலப்யவிசிஷ்டனாய் ஸ்வஜநரக்ஷகனுமாயிருந்த ஸர்வேஸ்வரனுக்கிருள் செய்யதாமரைக்கண்ணனு யுலகேழுமுண்டவவன் கண்டீரென்றுகொண்டு ஸ

இ — என்றநுபித்து உரைக்கிறார் (முற்றுமாய்க்கொண்டி த்யாதியால்) "ஜகதீஸ்வராவ்" என்கிறவிடத்தில் ஸ்ராவ் என்கிறதற்கு ஸ்ருஷ்டிகர்த்தா என்றர்த்தமாகிறப்போலே வெளிப்பட்டென்கிறதற்கு வெளிப்பட்டிருக்கிற வென்றர்த்தமாகலாமென்று நினைத் தருளிச்செய்கிறார் (தோற்றுகிறவென்று); தோற்றுகிறயென்றது - தத்ஸ்ராத்ரணமாகிறவென்றபடி. இவைபடைத்தானென்கிற தற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவற்றுக்கித்யாதியால்). பின்னும்மொய்கொள் சோதியோடாகினன் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால்) சோதிரூபம் தேஜோமயமாய் ஸ்வர்ணவர்ணவக்ஷண மாகிறதென்று கருத்து. ஒருமூவராகியமூர்த்தி யென்கிறதற்குந் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரஹ்மேத்யாதியால்) ஸ்வநாபிவேண என்

ப — செய்ய - தேஜோவான, ஸ்ரீயாஸஹாயமன்றிக்கே ஸாவகாசமுமியானவென்றபடி. சூழ் - வ்யாப்தமான, சுடர்ஞானமாய் - ஸஹஸ்ரகாமஸூர்யநிலாயாய், வையம் - ஸமஸ்தியும், ஸித்தஞாநக்கடுக்குநதெல்லாம் உபலக்ஷணம், வானம் - ஆகாசமும், உபரிதநலோகாநாமுபலக்ஷணம், மனிசர் - மநுஷ்யரும், தெய்வம் - தெய்வமும், ஜாதிசதுஷ்டயம். தேவர்களுமென்றபடி. மற்றும் - தீர்யக்ஸ்தாவரங்கள், நியந்த்ருக்களுமென்றபடி. மற்றும் - ஸமஸ்தவஸ்துக்களும், மற்றும் - தேவதாதிகளும், முற்றுமாய் - உக்தஸ்ருஷ்டமுமாய், வெளிப்பட்டிவை - இப்படிதோற்றுகிறஇவையைபடை

மூ—பின்னும்* மெய்கொள்சோதியோடாகினின்றே நமூவரா
கியமூர்த்தியே* ௧॥
மூவராகியமூர்த்தியை முதல்மூவர்க்கு முதல்வன்றன்னைச்*

ஆ—ஸௌலப்யணீய வ்யாக்ஷ னின்னுமென்கிறார். ॥௬॥

(மூவராகிய) இதன்மேலே ஸௌலப்யனான வெம்பெரு
மானுடைய எளிமையைச்சொல்லுகிறது. இப்படி த்ரிவிக்ர
மாவதாரவ்ருத்தனும், ஸகலலோகநிர்வாஹகரான, ப்ரஹ்ம
இ— கிறவிடத்தில் "தத்வஜ்ஞவிஷயங்கள்" உதாஹரணஸஹி
ப்ரசம். ஐசகாரணவஸ்துவை உபாஸித்துவாபவர்க்கக்ஷ
த்தை விடிக்கிறாரென்று நினைத்தருளிச்செய்கிறார் (ஸவேஶ்வர
னிதஹ்ரஹிபால்) * * * ॥௧॥

✳ இரண்டாம்பாட்டு. ✳

இத்திருவாய்மொழியிலே ஸௌலப்யகாஷ்டை சொல்லப்படு
டுகிறதென்றவதாரிகையிலே சொன்னீர்? இம்முதற்பாட்டிலே
ஸௌலப்யமாத்ரமும் சொல்லிற்றில்லையேயென்ன அருளிச்செய்கி
றார் (இதன்மேலிசஹ்ரிபால்) இவர்கள் ஆஶ்ரயிபாதொழிகிறது
பரத்வதாநிரூபணவத்தாலே யாகவுமாமென்றுபார்த்து அ
தற்காக ஸௌலப்யனீயனின்றனென்று முதற்பாட்டிலே சொல்
லி யிதன்மேலே க்ருஷ்ணஸௌலப்யகாஷ்டையை யுபதேஶிக்க
கைக்காக ஸௌலப்யத்தைச் சொல்லுகிறாரென்றுகருத்து. முதல்
மூவர்க்கு முதல்வன்தன்னையென்கிறதையுரைக்கிறார் (ஸவேஶ்வர

ஶ— த்தான்-ஸ்ருஷ்டித்தவனை,பின்னும் - இந்தவைஷவத்தின்மே
லே, மொய்கொள் - விரவியபாக்ஷமான, சோதியோடாகினு
ன் - ஜாதிலோடேகூடியிருக்குமவனை, தேஜஸ்ஸஹ்ருதீரா
யாக்ஷனனென்றபடி. ஒருமூவராகிய - சதிகீயத்ரிவிக்ர
மாவனை, மூர்த்தி - ஸ்வாமியாவான், செய்யதாமரைக்கண்ண
னாய், காரணதாபேஸிநதாய், உலகேழும் உண்டவன் - ஸ
கலலோகங்களையும் ஸம்ஹரித்தவன் - கங்டென்றதிறேதஹணா
வயாநஜநநாஷம் * * * ॥௨॥

மூவராகிய மூர்த்தியை - த்ரிஸாவ்யாகவிக்ரஹங்களை யுடை
யவனை, முதல்மூவர்க்கு - ப்ரதானரான மூன்றுதேவதைகளுக்கு

மூ—சாபமுள்ளனநீக்குவானைத்தடங்கடற்கிடந்தான்றன்னைத்*
தேவதேவனைத் தென்னிலங்கை யெரியெழச்செற்றவில்லி
யைப்* பாவநாசனைப்பங்கயத்தடங்கண்ணனைப்பரவுமினோ*॥

ஆ—ஸம்ஸாரிகளுக்குநிவர்த்தகனாய், அவர்களுடையதோஷா பஹாரஸமர்த்தகமௌசித்ய வீர்யாத்யதிசயகனாய், க்ஷீரார்ணவநிகேதனனா யிருந்துவைத்து ஸ்ரீதசரதாஸ்ரயணீய ஸ்வாமியாக உபாஸ்யாத்மஜனாய் வந்தவதீர்ணனாய், இப்படி ஸௌலப்யனாயிருக்கச்செய்தே ஸர்வஜ்ஞத்வவிசேஷாதிக ளால் ஸௌலப்யத்தில்காட்டில் தேவர்கள் யாதொருபடி விலக்ஷணரா யிருப்பார், அப்படியே தேவர்களில்காட்டிலும் விலக்ஷணனாய் ஸ்ரீதவிரோதி நிரஸநதாமனாய், உபாஸநாத்மத்தாலே ஸர்வஜநஸம ஸர்வாபக்ஷயகாரனுமிருக்கிற வெம்பெருமானைப்பரவுமினோவென்கிறார். * * * உ॥

இ—(தேசாதியால்) சாபமுள்ளனநீக்குவானை என்கிறதைவிவரிக்கிறார் (அவர்களுடையவிசாதியால்) தென்னிலங்கையிசாதிவாக்யத்திலேயாயிக்மான ஸயத்தை அருளிச்செய்கிறார் (ஸ்ரீதசாதியால்) தேவதேவனையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படி ஸௌலப்யாதியால்) தென்னிலங்கை யெரியெழச்செற்றவில்லியை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஸ்ரீதவிரோதியாதியால்) பாவநாசனை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உபாஸநாதியால்)

ஸ்ர—க்கும், ப்ரஹ்மாதிதேவர்களுக்குமென்றபடி. முதல்வன்றன்னை-காரணபூதனை, சாபமுள்ளன-பாவங்களுள்ளவையெல்லாத்தையும், பாபஹேதுக்களெல்லாவற்றையுமென்றபடி. நீக்குவானை-நிவர்த்திப்பிக்குமவனை, தடங்கடல்கிடந்தான்றன்னை - விசாலஸமுத்ரசாயினை. தென்னிலங்கை - தக்ஷிணதிக்கிலுள்ள லங்கையிலே, எரியெழ - அக்னி கிட்டவந்தெனக்கு ப்ரதீபமானது உஜ்ஜ்வலிக்கும்படி, செற்றவில்லியை- ஸத்ருநிரஸநத்திலே ப்ரவ்ருத்தனான, தேவதேவனை - தேவதேவனை, பாவநாசனை-பாபநாசகனை, பங்கயத்தடங்கண்ணனை- பங்கஜவிசாலநேத்ரனை, பரவுமினோ- ஸ்துதியுங்கோள். * * ௨॥

மூ— பரவிவானவ ரேத்தநின்றபரமனைப்பரஞ்சோதியைக்* குர
வைகோத்தகுழகனைமணிவண்ணனைக்குடக்கூத்தனை* யர
வமேறியலைகடலமருந்துயில்கொண்டவண்ணலை* யிரவுந
ன்பகலும்விடாதென்றுமேத்துதன் மனம்வைம்மினோ* ௱௩௱

ஆ—(பரவி) அடர்வறுமமரர்களாலே ...யனாய், நிர...யாய், ...மாயியாயி
ருந்துவைத்து, ...னாய், ஸ்ரீ...
...னாய், ஸ்ரீ...னாய், ...
...யிருந்தவனை யிரவுநன்பகலும் விடாதென்று

இ— "..." என்கி
றபடி. * * * ௱௨௱

✻ மூன்றும்பாட்டு, ✻

பரவியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (...மென்று) ...ஞ்சிக்கிறார் (...
...யால்) ...மான ...த்தையருளிச்செ
ய்கிறார் (...யால்) குரவைகோத்தகுழகனை யெ
ன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீ...யால்)
மணிவண்ணனையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீ
...னென்று) குடக்கூத்தனையென்கிறதற்குத் தா
த்பர்யமருளிச்செய்கிறார் (...யால்) இப்...

ப—பரவி - ...த்து, விடாமலென்றபடி. வானவர் - ஸூ
ரிகள், ஏத்தநின்றபரமனை, ...க்கும்படிநின்ற ...னை,
பரஞ்சோதியை - பரஞ்சோதியான, அலைகடல், ...
...த்திலே, அரவமேறி - ...' அமருந்துயில் - ...
...மானநித்ரையை, கொண்ட - ...த்தவனை, அண்ண
லை - ...யான, குரவை - ...வையிலே, கோத்தகுழகனை -
...னை, மணிவண்
ணனை - ...னை, முடிந்தாளலாம்படி ...னைவெ
ன்றபடி. குடக்கூத்தனை - ..., நல்லிரவுநன்பகலும், விடாதே -
...யாதே, என்றும் - ..., ஏத்துதல் - ...க்கையிலே,

மூ— வைம்மினும்மனத்தென்றியானுரைக்கின்றமாயவன்சீர்மை
யை* யெம்மனோர்களுரைப்பதென்னதுநிற்கநாடொறு
ம்வானவர்* தம்மையாளுமவனுநான்முகனுஞ்சடைமுடி

ஆ—மேத்துதன் மனம்வைம்மினோவென்கிறார். ॥௧॥

(வைம்மின்) இப்படி ஆஶ்ரயித்தாலவன் நம்மை விஷயீகரித்தருளுமோவென்னில்; ஸௌஶீல்யவானாய் ரக்ஷகனான

இ— ங்களாலேஸர்வாதாரத்திற்காட்டில்ஆயிக்யமானஸௌலப்யஞ்
சொல்லுகிறதென்று ஸங்க்ஷேபமபிப்ராயம். ॥௧॥

✳ நாலாம்பாட்டு ✳

ஸ்ரீவல்லபரிகளைத்தும்படி நிற்பனென்றால் ஆகாரமா
வாதிகளைத்துவரென்று மிடஞ்சொல்லவேணுமோ? ஆதலாலிப்
பாட்டு வ்யாக்யானமென்றேவென்ன விதற்குத் தாத்பர்யஞ்சொல்லு
கைக்காக அவதரிப்பிக்கிறார் (இப்படியித்யாதியால்) ஸௌலப்ய
முண்டானாலும் ஸௌஶீல்யமுண்டோ? வென்றபடி. வைம்மினும்
மனத்தென்று யானுரைக்கின்றவென்கிற ஆசார்யாதித்தாலே யி
வெளாத்யம் வ்யஞ்ஜிதமாகிறதென்று கருத்து. ஆசௌ இவ்வநுகா
ரம் வ்யாக்யானமென்று மபிப்ராயம். வானவர்தம்மையாளுமெ
ன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌஶீல்யேத்யாதி
யால்) வானவரையாளுகை ரக்ஷிக்கையாலே ஸௌஶீல்ய
மும், ஸமவஸ்திதியான வானவரைத்தாங்களாளப்பா
ர்க்கையாலே ரக்ஷகத்வமுமென்றுகருத்து. யதா, ஐஶ்வர்ய
னென்றுபேர்சொல்லாதே அவனுமென்கிறஸாமாந்யோக்தியாலே

ஈ—மனம்வைம்மினோ-மநஸ்ஸைவையுங்கோள். * ॥௪॥

நும்மனத்து - உங்களுடைய மநஸ்ஸிலே, வைம்மினென்று-
வையுங்கோளென்று, யானுரைக்கின்ற -நான்சொல்லுகிற, என்னா
லேசொல்லப்படுகிறவென்றபடி. மாயவன்சீர்மையை- ஆஶ்சர்யபூத
னுடைய ஸௌஶீல்யத்தை, எம்மனோர்கள் -ஸஜாதீயர், உ
ரைப்பதென் -சொல்லுகிறதேது, நான்சொன்னால் ஏகவாதிகள்
சொன்னாரென்பீர்களோ?யென்று கருத்து. அதுநிற்க-தத்திஷ்டது,
நாம்சொல்லுகைகிடக்கிடுவென்றபடி. வானவர்தம்மை - தேவதை
களை. ஆளுமவனும் - நியமிக்கிற அந்தஜநனும், நான்முகனும்

ரு— யண்ணலும்* செம்மையாலவன்பாதபங்கயஞ்சிந்தித்தேத்தித்திரிவரே ॥௪॥

திரிபுகாற்றேடகல்விசும்புதிணிந்தமண்கிடந்தகட* லெரியுந்தீயோடிருசுடர்தெய்வமற்றுமற்றுமுற்றுமாய்* கரிய

ஆ—ப்ரஹ்மாதிகளுக்கும்கூடவொருதடையின்றியே ஸ்ருதியிக்கலாப்படி தன்திருவடிகளைக்கொடுத்துக்கொண்டிருக்கிற வளவிறந்த நீர்மையுடையனாயிருந்தவன் ஸந்நிதியோஜநராய்க்கொண்டாஸ்ரயிக்குமவர்களைக் கைவிடுமோவென்கிறார். ॥௪॥

(திரியும்)ஸ்வஸங்கல்பாயத்தமான வாய்வாகாஸாதி ஸகலபதார்த்தங்களையும் ப்ரகாரபூத விஸாலஸ்வாதி ஸகலங்களையுமுடையனாய்

இ—ஸகிக்ஷாத்க்ருதம் விஸக்திதமென்று கருத்தாகவுமாம். இதுஸம்த்ருனுக்கு விஸேஷணமாயிருந்ததேயாகிலும், ப்ரஹ்மாருக்கும் ஸம்பந்தமென்றுகருத்தாலே க்ஷாத்ரானைவென்று வலஹாவவநந்ரயோகம் ஸுஸம்ப்ரூத்ரவாம். செம்மையாலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருவிதாதியால்) அவன்பாதபங்கயமித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸுருதிக்கலாம்படியித்யாதியால்) மாயவஃசீர்மை யென்கிறதினர்த்தத்தைக்காட்டுகிறார் (அளவிறந்தவித்யாதியால்) பாட்டுக்கு வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (ஸந்நித்யாதியால்) * ॥௪॥

✳ஐந்தாம்பாட்டு.✳

ப்ரதிபாத்யத்தில் ஸாஸநாயிகாரணம் நியந்த்ருநியாம்யஸம்பந்தமென்று காட்டுகிறார் (ஸ்வஸங்கல்பாத்யாதியால்) ஸ்வஸங்கல்பாயத்தமானவென்றது - வாய்வாதிகளுக்கும் ப்ரகாரபூதாதி

ஸ—சடைமுடி அண்ணலும் ஸ்ஷ்டம், செம்மையால்-ருஜுத்வத்தாலே, தடையின்றிக்கேயென்றபடி. அவன்பாதபங்கயம் - தத்வாதிபம்ஸஜத்தை, நாடோறும் - தினந்தோறும், சிந்தித்தேத்தி - ஸ்ஷ்டம், திரிவரே — இதுதானேயாவித்தாய் நிற்பரே - ஆதலாலவன் ஸௌஸீல்யம் ப்ரஸித்தமன்றோ?வென்றபடி. * ॥௫॥

கரியமேனியன் - நீலமேகஸ்ரூபனான, செய்யதாமரைக்கண்ணனான, கண்ணன் — ஸாக்ஷாத்ஸ்ரூபனான, விண்ணோரிறை - ஸர்வேஸ்வரனான நாயகனான ஸரியும் — ஸாரூப்யமாகாநின்ற, பல் — பஹுவான, ஆக

மூ—மேனியன் செய்யதாமரைக்கண்ணன் கண்ணன் விண்ணோரி
றை* சுரியும்பல்கருங்குஞ்சியெங்கள் சுடர்முடியண்ணல்தோ
ற்றமே* ॥ ரு ॥

ஆ—ஸர்வேச்வரனாய், புண்டரீகாக்ஷனாய், நீலா
லகஸமாயமாநனாய், ஸேஷேஸேஷாஸந ஸைநேசப வ்ரு
ஷ்ணிப்ரம்ருதி நித்யஸூரிகளுக்கு ஸேஷியாநனாயிரு
ந்த வெம்பெருமானை நான் சரணம்பெற்றேனாகாதோவென்கிறார்॥

இ—கண்ணுக்கும் விசேஷணம். ஸகாரகம் - ஸம்ஸ்லேஷகம். திரியுங்
காற்று அகல்விசும்பு என்றிப்படி ஸர்வங்களுக்கும் ஸகாரகமா
யிருக்கையாலே விசிஷ்டமாக நிர்தேஷ்டமாகையாலே தத்விசேஷ
ணாநாவஸி தத்ஸ்வரூபநிரூபகம் விவக்ஷிதமென்றுகாட்டுகிறார்-
(ஸகாரகத்யாதியால்) ஸூக்ஷ்மம் காரியாயத்வமென்று
ஜ்ஞாநவாம். கருங்குஞ்சியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செ
ய்கிறார் (நீலேத்யாதியால்)வாயாரா: - ஸாரா:, விண்ணோ
ரிறை யென்கிறதையுரைக்கிறார் (ஸேஷேத்யாதியால்) அண்ண
ல்தோற்ற மென்கிற பதத்தினர்த்தத்திலே பாட்டுக்குத் தா
த்பர்யமென்று காட்டுகிறார் (எம்பெருமானையித்யாதியால்) நான்
சரணம்பெற்றேனென்று அவனுடைய ஸௌசீல்யத்தை ஸ்வீகரி

ப—லகா யெண்ணிக்கொள்ளும்படியான வென்றபடி. கருங்
குஞ்சி-நீலகுஞ்சிதகேசத்தையுடையனை, குஞ்சி-கேசபந்தம்,
சுடர்முடி - தேஜோமயகிரீடனை, எங்களண்ணல் தோற்றம்-
ஸௌசீல்யாதியுடைய ஆகாரமானது, ஸௌசீல்யாதியோக்யமான
ஸ்வீயஜ்ஞாநமானதென்றபடி. திரியுங்காற்றோடு - ஸஞ்சாரசீலமா
னவாயுவோடே, அகல்விசும்பு- விசாலமான ஆகாசமும், திணிந்தமண்-
கடினமாக ஸ்ருஷ்டியும், கிடந்தகடல்- ஏகதேசஸ்திரமான
ஸமுத்ரமும், "ஸ்வேவோதயஸ்மாதஸமிவர்த்ததி" இத்யாதியிற்படி
பே ஷயர்ஜெயதிக்கு திபாதேயிருந்த ஸமுத்ரமுமென்றபடி.
எரியுந்தீயோடு - ஜ்வலநசீலமான அக்னியோடே, இருசுடர்-இரண்டு
தேஜஸ்ஸுக்களும், உதித்த ஸூர்யசந்த்ரருமென்றபடி. தெய்வம் - தேவ
ஜாதியும், மற்றும் - ஸந்தஷ்டரும், மற்றும் - தியக்ஸ்தாவரமும்
முற்றுமாய் - உக்தமான க்ருத்ஸ்நமுமாயிருக்கிறது; தம்முடைய

மூ—தோற்றக்கேடவையில்லவனுடையா னவனொருமூர்த்தியா ய்ச்* சிற்றத்தோடருள்பெற்றவனடிக்கீழ்ப்புகநின்றசெங்க

ஆ—(தோற்றம்) ஜந்மமரணாதிஷ்டிரமேஷ ரஹாஸ்ய ஷ்டனாய், ஜ நமரணாதிதோஷயுக்த உரூ ஸமஸ்தங்களுக்கு நியந்தாவாய், ஜூஷு யுக்தநாஷிஹவேஷ ஸ விஷ்டதனாய், ஹிரண்ய விஷயதிரவயிக

இ—க்கிறுரென்று ஸம்மதியும்ஸ ஷிமெக. * ||ருக||

✻ அரும்பாட்டு. ✻

தோற்றக்கேடவை யில்லவ னென்கிறதை யுரைக்கிறுர் (ஜ ந்நாதிகளால்) ஆனல் உடையானென்றதுவ்யாஹத மன்றேவெ ன்ன வதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (ஜந்நாதிகளால்) விஹவிஷமீரஅராஜஜந்மாதிகளும் சொல்லுகிறதென்றுகருத்து. ஒ ருமூர்த்தியாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (ஜூ ஷயேத்யாதிகளால்) ஒருமூர்த்தியென்று யோகவிலக்ஷணமும் சொல்லுகையாலும் சிறறத்தோடென்கிற கோபரூபவஷிம த்தாலும் மூர்த்திரூபம் ந்ருஸிம்ஹவிக்ரஹமென்றுகருத்து. சிற்றத்தோடித்யாதி நின்றஉத்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய் கிறுர்(ஹிரண்ய த்யாதிகளால்)செங்கண்மாலென்கிறதற்குத் தாத்பர்

ப—ஆநந்தாநுகூலமாதிபரீரகனுவெம்பெருமானைநி ரூபணமாக விஷயீகரியாநின்றதென்கிறவிவ்வஸ்ராஹிவ்யாயத்தா லே - எங்கள், அண்ணல்தோற்றம் திரியும்காற்றுமுதலானகூக ஸ்முமாயிருக்கிறதென்றுஉவகரித்தபடி. "ஜயராஷ்தவாரங்ஸம் ஸமாஸ:" "ஓயஹிமிமிதாஸயா:" என்கிற ஶ்லோகங்களைப் போலே இப்பாட்டென்றுகண்டுகொள்வது. * ||ருக||

தோற்றக்கேடவை- ஜநநாஸங்களாகிற அஶ்வதோஷங்களை, தோற்றம் - ஆவிஷ்காவம், ஜநமென்றபடி. கேடு - நாஸம், இல் லவன் - இல்லாதவன், உடையான் - தோற்றக்கேடுகளையுடையவன், அவன் - அப்படிப்பட்டவன், ஒருமூர்த்தியாய் - யோகவிலக்ஷண விக்ரஹனாய், ந்ருஸிம்ஹ ரூபனாயென்றபடி.சிற்றத்தோடு-கோ பத்தோடேயிருக்கச்செய்தே, அருள்பெற்றவன் - க்ருபாவிஷய மானவன் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானென்றபடி. அடிக்கீழ்புக-தன் ஸ்ரீபா தஸமீபத்தைக்கிட்டும்படி, நின்ற - ஸாந்நித்யம்பண்ணிநின்ற, செங்கண் -

மூ— ண்மால்* நாற்றத்தோற்றச்சுவையொலியுறலாகின்றவெம்
வானவ* ரேற்றையேயன்றிமற்றொருவரையானிலேனெ
ழுமைக்குமே* ||சு||

ஆ— சௌர்யத்தினாலே அசேஷஜநபயாவஹனாயிருக்கச்செய்தே ஆஸ்ரிதனான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் கூசாதே சென்று திருவடிகளின்கீழே புகலாம்படி ஸுலபனுமாய், ஸம்ஸ்லேஷஜநித நிரதிசயப்ரீதியாலே ஆதாரவானாயுமிருந்த வெம்பெருமான் அயர்வறுமமரர்களுடைய ஸகலகரணங்களுக்கும் போக்யனாப்போலே என்னுடைய ஸகலகரணங்களுக்கும் போக்யமானான்; இனி யாத்ருச்சிகமாக வேனல்லதெனக்கு மற்றொரு ப்ராப்யமில்லையென்கிறார். * * ||சு||

இ— மருளிச்செய்கிறார் (ஸம்ஸ்லேஷத்யாதியால்) வானவரேற்றையென்றது ஊர்ஜிதாஸ்ரயமென்கிறார் (அயர்வறுமித்யாதியால்) ஸகலகரணங்களுக்கும் போக்யமென்றது நாற்றத்தோற்றச்சுவையொலி யுறலாகின்றவென்கிறதற்குத் தாத்பர்யம். என்னுடையவென்று கரணங்களை விசேஷித்தது எம்பெருமான் என்றதற்குத் தாத்பர்யம். எழுமைக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (யாத்ருச்சிகமாகவென்று) மற்றொருவரையானிலேனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கித்யாதியால்) அநந்யப்ராப்யனான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு கோராபத்ஸமயத்திலும் ஸுலபனாயிருந்தபடியைக்கண்டு நானும் அநந்யப்ராப்யனானேன் ஆதலால், அவன் ஸாத்யஸாதநனுமவனேயனு

ப— ஸௌலப்யத்தாலே ஆராதனெந்தனான, மால் - வ்யாமோஹன் ஸுஹ்ருத்விஷயத்திலென்று கருத்து. நாற்றத்தோற்றவித்யாதிக்கு அர்த்தம்: நாற்றம் - கந்தம், தோற்றம் - ரூபம், சுவை - ரஸம், ஒலி - சப்தம், உறல் - ஸ்பர்சம், ஆகின்ற - இவையெல்லாமாய் நின்றவனான, ஸகலேந்த்ரியங்களுக்கும் போக்யனானவென்றபடி. எம்வானவரேற்றையேயன்றி - ஸ்வாதீனரான நித்யஸூரிநிர்வாஹகனையொழிய, எழுமைக்கும் - ஸகலஜந்மங்களிலும், யான் - நான், மற்றொருவரையிலேன் - அந்யரையுடையேனல்லேன், அந்யப்ராப்யமுடையேனல்லேன்றபடி. ||சு||

௭—எழுமைக்குமெனதாவிக்கின்னமுதத்தினையெனதாருயிர்*
கெழுமியகதிர்ச்சோதியை மணிவண்ணனைக் குடக்கூத்தனை*
விழுமியவமரர் முனிவர்விழுங்குங் கன்னற்கனியினைத்*

ஆ—(எழுமைக்கும்) எற்றைக்குமெனக்கு உபகாரகனுமாய் ஸகலஸ்ரேஷ்டமான ஸௌந்தர்யத்தையுடையனாய் ஸமாராதனத்தை யுடையனாய், விழுமியவமரர் முனிவர்விழுங்குங் கன்னற்கனியாயிருந்துவைத்தெனக்குஸுலபனுமாய் பக்தியோகாஸாதிஸ்வபாவமுடையனாயிருந்தவெம்பெருமானை அரியனென்றுகூசாதே தொழுங்கோள்

இ— மென்றிருக்கில் நீங்களுமநாயாஸேந கைங்கர்யமாகுங்கோளென்று காருணிகரமன்றருளிச்செய்கிறார். இந்தாலெல்லாமதியுமாயிற்று. ||௬||

✳ எழாம்பாட்டு. ✳

எழுமைக்கு மெனதாவிக்கின்னமுதத்தினை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எற்றைக்குமித்யாதியால்) எற்றைக்கும் - ஸர்வகாலத்திலும், எனதாருயிர் கெழுமியகதிர்ச்சோதியை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஸ்ரேஷ்டேத்யாதியால்) மணிவண்ணனை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கித்யாதியால்) தூயமனத்தராயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அரியனித்யாதியால்) இத்தாலெழுச்சொன்ன ஸௌலப்யத்துக்கு ஸமமாக கூசாமையை விதிக்கிறாரென்று ஸமதியும்பரிவிமிர்க. இறையுநில்லா துயரங்களேயெ

ப—எழுமைக்கும் - ஸர்வதா. எனதாவிக்கும் - ஜீவாத்மாவுக்கு, இன்னமுதத்தினை - ஸாநுபவயோக்யமான, இதுகுடக்கூத்தனுக்கு விசேஷணம். எனது - ஜீவமான, ஜீவஸாதாரணமானவென்றபடி. ஆருயிர் - த்ருடமானவாத்மாவோடே, விஷயாந்தராஸக்தமானவாத்மாவோடேயென்றபடி. கெழுமிய - ஸம்ஸ்லிஷ்டனை கெழுமுகை - சேருகை, கதிர்ச்சோதியை - கிரணரூபஜ்யோதிஸ்ஸான, உஜ்ஜ்வலஸ்வரூபனென்றபடி. விழுமிய - மஹாநீயரான, அமரர் - நித்யஸூரிகள், முனிவர் - முமுக்ஷுக்கள், விழுங்கும் - அநுபவிக்கிறவென்றபடி. கன்னற்க னியினை - மாதுர்யமான, கனிரஸமான் கல் அது போலும். மணிவண்ணனைக்குடக்கூத்தனை - ஸர்வம். தூயமனத்தராய்-

மூ—தொழுமின்றூயமனத்தராயிறையுநில்லா துயரங்களே* ॥எ॥
துயரமேதருதுன்பவின்பவினைகளாயவையல்லனாய்* யுயர்நி
ன்றதோர்சோதியாயுலகேழுமுண்டுமிழ்ந்தான்றன்னை* யயர

ஆ—தொழ உங்களுடைய ஸமஸ்த து:க்கங்களும் போமென்கிறார். ॥
(துயரமேதரு) ஸ்வாதீந புண்ய பாப ஸாதநனாய், ஸு
கது:க்கஸ்வரூபனாய், நிரவதிக தேஜோவிசிஷ்டனாய், ஸகலலோக
ரக்ஷகனாய், ஸ்வாச்ரிதஜநங்களை யமகிங்கரர் வாயில்புகாதபடி யவர்
களை ரக்ஷித்தருளும் ஸ்வபாவனாய், அவர்களோடு ஆதரமாக ஸம்
ச்லேஷிக்கும் ஸ்வபாவனாயிருந்த தயரதற்கு மகன்றன்னையன்றிம

இ—ன்கிறதை விவரிக்கிறார் (உங்களுடையவித்யாதியால்) ॥எ॥

எட்டாம்பாட்டு.

துன்பவின்பவினைகளாயென்கிற ஸுகது:க்கஹேதுத்வத்துக்குத்
தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வாதீநேத்யாதியால்) அவையல்ல
னென்கிறதை யுரைக்கிறார் (ஸுகது:கஸ்வரூபனென்று) அயர்வா
ங்கு நமன்றமர்க்கருநஞ்சினை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்
செய்கிறார் (ஸ்வாச்ரிதேத்யாதியால்) அச்சுதன்றன்னை யென்கிறத
ற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவர்களோடித்யாதியால்)

ஶு—ஶுத்தமநஸராய், ஸகலது:க்கஸம்ஹாரகஹேதுமநஸராயென்
றபடி. தொழுமின் - தொழுங்கோள், துயரங்கள் - து:க்கங்கள்,
இறையும் - லேசத்தும், நில்லா - நதிஷ்டந்தி. * ॥எ
துயரமேதரு - து:க்கைகதாநசீலங்களான, துன்பவின்ப
வினைகளாய் - து:க்கஸுகஹேதுகர்மங்களாய், புண்யபாப
ங்களாயென்றபடி. துன்பம்-து:க்கம், இன்பம்- ஸுகம், வினை-
கர்மம், புண்யமும் து:க்கஹேதுக்களாகையாலே து:க்கைக
ஹேதுக்களாயிறே. அவையல்லனாய் - அந்த புண்யபாபரஹிதனாய்,
உயர்நின்றது - ஸர்வோத்க்ருஷ்டமாயிருந்த, ஓர்சோதியாய் - விலக்ஷ
ணஜ்யோதிஸ்ஸாய், ஸூர்யஸஹஸ்ரஸம தேஜோவிசிஷ்டனாய்
என்றபடி. உலகேழுமுண்டுமிழ்ந்தான்றன்னை - லோகஸமஸ்தங்களை
யுமுண்டுமிழ்ந்தவனையென்றபடி. அயர-ஸோஹிக்கும்படி, வெதநர்
த்தநிக்கும்படி. வாங்கு-ப்ராணனைவாங்குமவனான, தர்ம்ப்ராண

மூ—வாங்குநமன்றமர்க்கருநஞ்சினையச்சுதன்றன்னைத்* தயரதற்
குமகன்றன்னையன்றிமற்றிலேன்றஞ்சமாகவே* ॥அ॥

ஆ—ற்றிலேன்றஞ்சமாக நீங்களுமாச்ரயிங்கோளென்கிறார். ॥அ॥ (தஞ்சமாகிய) எம்பெருமான் திருவவதாரம்பண்ணி ஸாதுஜனங்களைப் ரக்ஷித்தருளுகிற காலத்தில் உதவப்பெற்றிலோம் ஸ்ரீவைகுண்டத்திலே யெழுந்தருளியிருக்குமிருப்பு நமக்கு ஸௌலபமன்று, ஆனபின்பு அங்கனே யவனை யாச்ரயிக்கும்படியென்னில்;

இ—பாட்டுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீங்களும் த்யாஜ்யபால்) ஸௌலப்யத்தையும் கீழே ராமக்ருஷ்ண ந்ருஸிம்ஹாத்யவதாரங்களைச் சொல்லியவைத்தில்தான் தஞ்சமாகப்பற்றினது ராமாவதாரமென்று ஸூசிதத்தைச் சொல்லுகிறாரென்று திருவுள்ளம். இத்தாலே ஸம்மதியுமாய்த்து. இப்படியே பூர்வாசார்யர்களெல்லாரும் சில வேதிகங்களும் சொல்லிக்கொண்டு நிர்வஹித்தார்கள். * * * ॥அ॥

* ஒன்பதாம்பாட்டு. *

ராமாவதாரமே ஆச்ரயணீயமென்று நிர்தாரணம்பண்ணி யநந்தரமே நெஞ்சினால்நினைப்பான் யவனவனாகுமென்று நெஞ்சாலே நினைத்த ரூபமெல்லா மாச்ரயணீயமென்கை விரோதமன்றோவென்ன ஸமாதிப்பிக்கிறார் (எம்பெருமானிச்சையால்) ப்ரத்யக்ஷித்தாலல்லது ஸோபாச்ரயணம் ஸாகாரமன்றென்று ஸாமகாந்யாயம். ஆழ்வாரைப்போலே யெங்களுக்கு யோக்யதையுமில்லையேயென்று காட்டிக்கொள்ளுகை. ஸமாதித்த காலத்தில் உதவப்பெற்றிலோமென்று சோகிப்பார்க்குச் சொல்லுகிறாரென்றதாய்த்து. ஆனால் மந்த்ரயோஜனான விவர்களைக் குறித்து நினைத்ததெல்லா மாச்ரயணீயமென்னக்கூடுமோ? ப்ருசிவா

ப—ஸம்ஸாரிகளானவென்றபடி. நமன்றமர்க்கு - யமபடர்க்கும், நமன் - யமன், தமர் - ப்ருத்யர், அருநஞ்சினை - து:ஸஹமான விஷமான, யமபடநிரஸகனானவென்றபடி. அச்சுதன்றன்னை - அச்யுதனை, தயரதற்குமகன்றன்னையன்றி - தசரதனுக்கு புத்ரனானவனைத்தவிர, மற்று - அந்யத்தை, தஞ்சமாகவிலேன் - ரக்ஷகமாகவுடையேனல்லேன். * * * ॥அ॥

மூ—தஞ்சமாகியதந்தைதாயொடுதானுமாயவையல்லனாய்* யெஞ்ச
லிலமரர்குலமுதல்மூவர்தம்முள்ளுமாதியை* யஞ்சிநீருலக
த்துள்ளீர்களவனிவனென்றுகூழேன்மின்*

ஆ—ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கும் ப்ரபுவாய், காரணபூதனு
மாய், அயர்வறுமமரர்களதிபதியாய், ஆஶ்ரிதர்க்குஸுலபனாவதரித்த
னாய் ரக்ஷகனும் பிதாவுமாய் மாதாவுமாய் தானுமாய் மற்றுமெல்
லாருமாயிருக்கிற வெம்பெருமானையுகந்தருளப்பண்ணியாஶ்ரயிப்பது

இ—"ஸாநமைவம்ஜ" என்கிறதில்லையோ? வென்ன பாட்டை ஸர்வா
வதாரஸாரமாக வுரைக்கக்கோலி மூவர்தம் முள்ளுமென்கி
றதையுரைக்கிறார் (ஸஹேதுகமாயால்) ஆதியென்கிறதை யுரை
க்கிறார் (காரணத்வாதியால்) எஞ்சலிலமரர்குலமுதலென்கிற
தையுரைக்கிறார் (அயர்வறுமித்யாதியால்) அவையல்லனாயென்கி
றதற்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (மற்றுமித்யாதியால்)
"ஸர்வதாஸர்வபூதேஷு ஸம்ஸ்திதோஹம்" என்கிறவையுமாயென்
றபடி. த்ருதீயபாதத்திலபிப்ரேதமான ஸ்வரூபத்தை யருளிச்
செய்கிறார் (உகந்தருளாவித்யாதியால்) உகந்தருளப்பண்ணியென்

ஈ—தஞ்சமாகிய - ரக்ஷகராயிருக்கிற, தந்தைதாயொடு - பி
தாமாதாக்களோடே, தானுமாய் - ஈதாவிதாக்களுமாய்தானு
மாய் என்றபடி. ஹிதகாரியும் ப்ரியகாரியுமாய் ஒருவன்தான் த
னக்குச்செய்யும நன்மையைச்செய்யுமவனாய யென்றபடி. அவைய
ல்லனாய் - தத்விலக்ஷணனுமாய், எஞ்சலில் - ஸங்கோசர
ஹிதமான, ஜ்ஞாநாதிஸங்கோசரஹிதமானவென்றபடி. எஞ்ச
ல் - ஸங்கோசம், அமரர் - நித்யர்களுடைய, குலமுதல் - கார
ணநிர்வாஹகனை, குலம் - ஸமூஹம், மூவர்தம்முள்ளும் - மூ
வருள்ளுகிற, ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களாலே த்யாநிக்கப்படுகிறவெ
ன்றபடி. உள்ளுகை - த்யாநிக்கை, ஆதியை - காரணபூத
னை, குறித்து - உத்திஶ்ய. உலகத்துள்ளீர்கள் - லௌகிகரான
நீங்கள், அஞ்சி - பரத்வத்தைக்கண்டு பயப்பட்டு, அவன் - அ
ந்த ஸௌலப்யகாஷ்டாவிஶிஷ்டனானவன், இது ஸௌலப்யம். இ
வன் - ஸௌலப்யவிஶிஷ்ட பரத்வவிஶிஷ்டன், இது காகா
க்ஷம், ஸௌலப்யகாஷ்டாவிஶிஷ்டனானவனே யென்றபடி. என்று

மூ—நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல்வண்ணனே *

ஆ— நாமவனுக்கொரு ரூபத்தை ஸங்கல்பித்தால் அது அவனுக்கு ரூபமாமோ? ஸ்ரீவைகுண்டத்தில் யாதொரு ரூபத்தை யுடையனாய்க்கொண்டெழுந்தருளியிருக்கிறான்? அதுவன்றோ? அவனுக்கு ரூபமென்னில், அங்ஙனிருக்கத்துள்ளீர்களிப்படி ஸம்ஶயிக்கவேண்டா, யாதொன்றையவனுக்கு ரூபமாக நினைத்தீர்கோள் அத்தையேயவன் திவ்யரூபமாகக்கொண்டருளுமென்கிறார்.

இ— திருவுள்ளக்லேசப்பண்ணியென்றபடி. அவனிவனென்று கூழேன்மினென்றது ஸஸந்தேஹக்லேசய மன்றோ? வென்ன வவதரிப்பிக்கிறார் (நாமித்யாதியால்) ஒரு ரூபத்தை யென்றது ஆக்ருதிவிசேஷத்தையென்றபடி. ரூபமோ வென்னுமளவாலே இவன் ஸம்ஶயமும் ஸூசிதம். எங்ஙனேயென்னில்; ஸம்ஶயஹேதுவிலே காணலாம். இவனென்றது காகாஸுரனென்றதாயிற்று. ஸ்ரீவைகுண்டத்திலிடான வஸதிகாவாக்யஶேஷத்தாலே அவன் ஸம்ஶயமும் ஸூசிதம். அதுவும் மேலே காணலாம். கூழேன்மினென்கிறதை யுரைக்கிறார் (ஸம்ஶயிக்கவேண்டாமென்று) நெஞ்சினால் நினைப்பான் யவனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (யாதொன்றையித்யாதியால்) யாதொன்றையென்றது - ஸாலக்ராமாதி பிம்பங்களில் யாதொன்றையென்றபடி. 'க்ஷேத்ராத்ரௌ ஸ்ரீசைலே ஸாலக்ராமாதிஷு' இத்யாதிவசனமநுஸந்தேயம். அவனாமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அத்தையித்யாதியால்) திவ்யரூபமாகவென்றது - திவ்யரூபவத் ஸ்வஸ்வரூப ஸமரூபமாகவென்றபடி. 'பிம்பாக்ருத்யாத்மநா பிம்பே' ஸர்வாத்மா ஸாந்நித்யாஸ்து" இத்யாதிவசநம். ॥ ௯ ॥

ப— கூழேன்மின் - இப்படி ஸம்ஶயியாதே கொள்ளுங்கோள், கூழ்ப்பு - ஸம்ஶயம், நீள்கடல்வண்ணன் - விலக்ஷண ஸ்வபாவன், கம்பீர ஸ்வபாவனென்றபடி. யவன் - யாதொரு ரூபாக, நெஞ்சினால் நினைப்பான் - உங்களுடைய மனஸ்ஸாலே நினைக்கப்பட்டான், திருவுள்ளக்கருத்திலே ஆராதிக்கப்பட்டானென்றபடி. அவனாகும் - அந்த விசிஷ்டனாவன். ॥ ௯ ॥

மூ— கடல்வண்ணன் கண்ணன் விண்ணவர் கருமாணிக்கமெனதா
ருயிர்* படவரவினணைக்கிடந்த பரஞ்சுடர் பண்டு நூற்றுவ*
ரடவரும்படைமங்க வைவர்கட்காகி வெஞ்சமத்தன்று தேர்*
....

ஆ—(கடல்வண்ணன்) ஸர்வேச்வரனான க்ருஷ்ணனாய், அயர்வறும
மரர்களுக்கு ஸ்வாமியாய், நாகபர்யங்கசாயியாயிருந்துவைத்து
[illegible] எனக்கு ப்ராணனாய் து
ர்யோதநாதிகள் ஸபரிவாரமாக நசிக்கும்படி பாண்டவர்க
....

பத்தாம்பாட்டு.

இ—கடல்வண்ணனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்(ஸ
ர்வேச்வரேத்யாதியால்) கருமாணிக்கமென்கிறதற்குத் தாத்பர்ய
மருளிச்செய்கிறார்(ஸ்வாமியாயென்று) படவரவினணைக்கிடந்த
என்கிறதை உரைக்கிறார் (நாகபர்யங்காதியால்) கண்ணன் என்கிற
தற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆச்ரிதபக்ஷேத்யாதியால்)
எனதாருயிரென்கிறதையுரைக்கிறார் (எனக்கித்யாதியால்) ப்ரா
ணனென்றது — ஜீவகனென்றபடி. நூற்றுவரென்கிறதை
யுரைக்கிறார் (துர்யோதநாதியென்று) படைமங்கவென்கிற
தை யுரைக்கிறார் (ஸபரிவாரமித்யாதியால்) ஐவர்கட்காகியெ
ன்கிறதை யுரைக்கிறார் (பாண்டவர்களுக்காகவென்று) தேர்கட
....

பத— கடல்வண்ணன் - ஸர்வேச்வரனான, விண்ணவர்கரு
மாணிக்கம் - ஸூரிகளுக்கு நிரதிசயமான, ஸ்வாமியான என்
றபடி. படவரவு - பணாஸஹிதமான நாகம், ஸஹஸ்ரபணத்தா
லே விகஸிதமான நாகமென்றபடி. அரவினணை - நாக
சயனத்தின்மேலே, கிடந்த - சயித்தவனாய், பரஞ்சுடர் - ரஜதகிரி
யின்மேலே மரகதகிரிபோலே அதிசயித தேஜஸ்ஸானவனாய், எனதா
ருயிர் - மதீயப்ராணனான, பண்டு - பூர்வகாலத்திலே, நூற்
றுவர் - சதஸங்க்யர், துர்யோதநாதிகளென்றபடி. அடவரும் -
ஸம்ஹரிக்கவருகிற, அடுகை - ஸம்ஹரிக்கை, படை - ஸேனை,
நூற்றுவரும் தத்ஸேனையுமென்றபடி. மங்க - நசிக்
கும்படி, ஐவர்கட்காகி - பஞ்சபாண்டவர்க்கு சேஷபூதனாய்,
வெஞ்சமத்து - உக்ரமான ஸமரத்திலே, அன்று - அந்த ஸமய

மூ— கடவியபெருமான்கனைகழல் காண்பதென்றுகொல் கண்களே* ॥ம॥

கண்கள்காண்டற்கரியனுப் கருத்துக்குநன்றுமெளியனுப்*

ஆ— ளுக்காக ஸாஶ்ரயஸ்வீகரணம்பிருந்த வெம்பெருமா னுடைய திருவடிகளையன்றே? வெனனுடைய கரணங்கள்காண் பதென்கிறுர். * * * * * ।ம॥

(கண்கள்) அயர்வறுமமரர்களுக்கருள் செய்யுமாப்போலே

இ—வியவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (ஸாமாந்ய ஐதிஹ்யியால்) கண்களென்றது உபலக்ஷணமென்கிறுர் (கரணங்களென்று) இனிமேல் முடியானிலே ஸகலகரணங்களுமுக்கணிக்கிறவென்று ஆழ்வார் தாமே விவரிக்கையாலே இது உபலக்ஷணமாகவேணுமென்று கருத்து. காண்பது - அநுபவிப்பது, வ்யக்தமான ஸம்ஸ்காரஷேஷமும் நிவ்ருத்தமாய்க்கையொழிந்தவாறே பரவி வானவரென்கிறபாட்டிலே ஸூஸுக்ஷமான க்ருஷ்ணத்தத்தை ஸரித்து அவன்திருவடிகளை அநுபவிக்க வாசைப்படுகிறுரென்று ஸம்பந்தியமிவெந்தெதெ. ரஜஸஜ நத்தத ஸவிஸாதமாகக் கீழேசொல்லி இங்கே க்ருஷ்ணை யாசைப்படுகைகூடுமோ? வென்னில்; உக்ஷாகாவாஸ்ய ஈஶ்வராஸ்யாதிகளிலே வெளிக்கையோக்யமல்லாமையாலே பெருமானுடைய ஸௌரீஸ்வரூபம் ஸர்வ்வ நவரியாஹத்தைப் பெறமட்டாதே கிடந்தாப்போலன்றிக்கே ஈஶ்வராஸ்யாதிகள் செய்யப்பெற்றவததலே க்ருஷ்ணையாசைப்படுகிறுரென்பார்கள். ।ம॥

✳ நிகமனம். ✳

வானவரீசனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறுர்(அயர்

ஶ— யிலேஷத்தை யநுபவிக்கப்பிறந்த ஸாம்யரஸிகளுடைய காலத்திலே, தேர்கடவியபெருமான் - ஸஜ்ஜநாயத்தை நடத்தின ஸாதியுடைய, கணைகழல் - யுநிக்கிறவணங்களை, வீரகட்டுகத்தாலே யுநிக்கிறவென்றபடி. கண்கள் - இந்த்ரியங்கள், என்றுகொல்காண்பது - ஸதா, ॥ம॥

கருத்துக்கு- இஙஸக்கு, நன்றும்- ஸமக்காக, எளியனுப் -

மூ— மண்கொள்ஞாலத்துயிர்க்கெல்லாமருள்செய்யும் வானவரீசனைப்* பண்கொள் சோலை வழுதிநாடன் குருகைக்கோன் சடகோபன்சொல்* பண்கொளாயிரத்திப்பத்தாற்பத்தராகக் கூடியபயிலுமினே* ||௧௧||

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ— ஸர்வேச்வரனான ஸர்வேச்வரன் ஸகலருக்குமருள்செய்யும்ஸ்வபாவனா யிருந்துவைத்து என்னுடையகருத்துக்கு நன்றுமெளியனாய் என் கண்கள் காண்டற்கரியனாயிருந்த வெம்பெருமான்விஷயமான வித் திருவாய்மொழி வல்லார் ஸ்ரீவைஷ்ணவராவர், இத்தைச்சொல்லுங் கோளென்கிறார். * * * * ||௧௧||

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

இ— (வாதிகேஸரிஜீயர்) மண்கொளிஜீயர்க்குத தாத்பர்யமருளிச் செய்கிறார் (வாதிகேஸரிஜீயர்) பத்தராகக்கூடுமென்கிற தையுரைக்கிறார் (வைஷ்ணவரென்று) பயிலுமினேயென்கி றதையுரைக்கிறார் (இந்தைபிஜீயர்) ||௧௧||

ஸ— வானவனாய்,கண்கள்காண்டற்கு - பெருங்காலகாண் கைக்கு, அரியனாய் - ஸகலமலாதவனாய், மண்கொள்ஞாலத்து - ஸ்தாவரமான லோகத்திலே, ஸ்ருஷ்டியிலென்றபடி. உயிர்க் கெல்லாம் - ஆத்மாக்களுக்கெல்லாம், அருள்செய்யும் - க்ருபை பண்ணும் ஸ்வபாவனை ஸர்வாத்மவைகருத்து. வானவரீசனை, நித்யஸூரிகள்க்கு சேஷி: பண்கொள்சோலை - மாதுர்ய கோஷ்டநலமான, ஸ்ரீமாநகரிலுள்ள. வழுதிநாடன் - வழுதிவளநாட்டையுடையரான, குருகைக்கோன் - காரிகாரியபதி, சடகோபன்சொல் - சடகோபனுடைய சொல்லான, பண்கொளாயிரத்து - மாதுர்யமான ஸஹஸ்ரத்திலே, இப் பத்தால் - இந்தபத்தாலே, பத்தராகக்கூடும் - ஸர்வராவையடிக் கும், பயிலுமினே - அப்யஸியுங்கோள். ||௧௨||

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

த்ருதீயாவநிஷ்கர்ஷாநுஸந்தாநம்.

(செய்யதாமரைக்கண்ணனாய்)

பத்மாக்ஷம் பாபஹந்த்ரு நிருபமஸுராதீஶவந்த்யாங்க்ரி

ஸ்ரீவத்ஸம் தத்தாத்ருக்ஷ ஜலதஶ்ரீ ஸாம்யஜி கசகோடீரம்

ஸாமாக்ருத்யாவதாரம் । ஶாஶ்வதாஸ்வாத்யஸாரம்

பரமபதநீம் ஸக்தசித்த்யுத்தமார்த்ரம் நீரோதாஸ்வாதிஷ்ட

வ்ருத்திம் ஸமித நாதேஷு ஜ்ஞேத்யாவர்ண நாதஜ: ॥ ௩௬ ॥

(பத்மாக்ஷம்) செய்யதாமரைக்கண்ணனாய் - அப்போதலர்ந்த செவ்வித்தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்களையுடையதுமாய், (பாபஹந்த்ரு) பாவநாசனை - பாபங்களையெல்லாம்போக்கவற்றாய், (நிருபமம்) மாசிலவண்ணனை - நிகரில்லாத நீலரத்நத்தினுடைய நிறத்தையுடையதுமாய், (சுராதீஶவந்த்யாங்க்ரி) வானவர்தம்மையாளுமிறை - தேவாதிபதிகளான ப்ரஹ்மாதிகளாலே விஜ்ஞாபிக்கப்படுகிற திருவடிகளையுடையதுமாய், (தத்தாத்ருக்ஷ ஜலதஶ்ரீஸாம்யஜி கசகோடீரம்) கரியபுல்கருங்குஞ்சியெங்கள் சுடர்முடியண்ணல் - அழகிய திருக்குழலின் ஶோபையோடேசேர்ந்த திருவபிஷேகத்தையுடையதுமாய், (ஸாமாக்ருத்யாவதாரம்) சிற்றந்தொடநாள்பெற்றவனடிக்கீழ்ப்புகநின்றசெங்கண்மால் - ஹிரண்யன்பக்கல்சீற்றமெல்லாநிற்கச்செய்தே ஸஹஜரான ப்ரஹ்லாதர்வந்து கிட்டலாம்படியான திருவடிகளையுடையதுமாய், (ஶாஶ்வதாஸ்வாத்யஸாரம்) விரும்பியமரர்முனிவர் விழுங்கும் கன்னற்கனியினை - வைகுந்தத்தமரராலும முனிவராலும் கன்னல்போலும் கனிபோலு மநுபவிக்கப்படுவதுமாய், (பரமபதநீம்) அபரவாங்கு நமன்றமர்க்கருநஞ்சினை - அறிவுகெடும்படி சுக்ருஷ்வாமெயைப்பண்ணும் யமபடர்கள் கிட்டவரும்படி அவர்களுக்குநஞ்சுமாய், (ஸக்தசித்த்யுத்தமார்த்ரம்) நெஞ்சினால்நினைப்பான் யவனவனாகும் - ஆஶ்ரிதர் நெஞ்சிலே பாவித்தபடியே ஸ்வரூபமாய், (நீரோதாஸ்வாதிஷ்டவ்ருத்திம்) கடல்வண்ணனின் த்ராதி - நித்யஸூரிகளுக்கு போக்யமாய்த்திருப்பாற்கடலிலே கணவளர்ந்தருளியும், தாமயோத்யாதிகள் நாடுபெரும தங்கள்

௧௧— தா.— ஸேனையோடே நலிக்கும்படி பாண்டவர்களுக்குத்தே ரை நடத்தியருளியும், இப்படி நிர்ஹேதுகமான ஔதார்ய வ்யாபாரத் தையுடையதுமாயிருக்கிற திருமேனியையுடையவனான ஸர்வ தாரஸாரஹனை எம்பெருமானை "செய்யதாமரைக்கண்ணன்" என்கிற ஶப்தத்திலே ஆழ்வார் தெளியவருளிச்செய்தாரென்கிறார்.॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

மூன்றாம்பத்தில்ஆறாந்திருவாய்மொழிமுற்றிற்று.

ஏழாந்திருவாய்மொழி.

ஆ—(பயிலுஞ்சுடரொளி) இப்படி எம்பெருமானுடைய நிரவதி கல்யாணரூப ஸௌலப்யஜநித நிரவதிகப்ரீ தியாலே ஸர்வசேஷித்வகாஷ்டாரூப பாகவதசேஷத்வைக ரஸராய் அந்த பாகவதசேஷத்வம் தமக்கு ப்ராப்யமென்கிறார்.

ஏழாந்திருவாய்மொழி.

